குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு ஆண்டு பங்குனித் திங்கள் 10—4—66 [இதழ்



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீகுருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

மனையில்வரு போகத்தின்
  மாதர்மக்கள் பாச
வினையில் அழுந்தி
  விடாதே — உனை இழந்து
காணாமற் கண்டானைக்
  காட்சி யறக்கலந்து
பூணாமல் எப்பொழுதும்
  பூண். (39)

ஆசிரியர் :-

வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 | 10-4-66 | இதழ் 5

உட்பொருள்

எண்		பக்கம்
1	அஜபா நடனம்	... 169
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 176
3	சித்தாந்த வினாவிடை	... 184
4	சிங்கம்	... 189
5	திருக்கடவூர் தேவஸ்தானத்திற்குச் சுழற் கோப்பை வழங்கும்விழா	193
6	அமுதிற்குத் தமிழென்று பேர்	... 200
7	செந்தமிழ்ச்செல்வர் வாழ்க!	... 204
8	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை	... 205
9	செய்திகள்	... 209
10	எதிர்காலம்	... 213
11	Extract from the Visitors' Book	183. 188, 199, 208.

அட்டைப்பட விளக்கம் :-

அப்பர் சுவாமிகள் திருவுருவத் தோற்றம்.

குருபூஜைத் திருநாள் 16-4-66,

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] விசுவாவசு - பங்குனி - 10—4—66 [இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

அஜபா நடனம்

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது பெரிய தோர் ஆப்தமொழி என்கின்ருர் தாயுமான அடிகள். சிறிய பொருள்கள் அனைத்திலும் சிறியது அணு. அதனையும் இறைவன் அசைத்தால்தான் அசையும் என்ற நிலை இருக்கு மாயின், ஏனைய பொருள்கள் தாமாக அசைவது என்பது எங்கே உளது!

உலகம் அசைவதற்கு, இறைவன் தானும் அசைய வேண்டியுள்ளது. அதனுல், எல்லாப் பொருள்கட்கும் நிலைக் களமாய், தனக்கு ஓர் நிலைக்களம் இல்லாது அசைவின்றி

நிற்கும் பெரும்பொருளாகிய அவன், ஓர் நிலைக்களத்தில் வரம்புபட்ட பொருளாய் நின்று அசைகின்ருன். அந்நிலையில் அவனுக்கு நிலைக்களமாவன உயிர்களே. அந்நிலைக்களத்தில் நின்று அசையும் அசைவே நடனம். இதனை,

"எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே நட்டம்"

என்கின்றது, 'உண்மை விளக்கம்' என்னும் சித்தாந்த நூல். 'இறைவன், உயிர்களது நெஞ்சத் தாமரையில் நின்று நடிக்கின்ருன்' என்பதும், இந்நிலையையேயாகும். 'அகத்தில் நெஞ்சத் தாமரையிலும், புறத்தில் தில்லைச் சிற்றம்பலத்திலும் நின்று நடிக்கின்ருன் இறைவன்' என்பதை,

"சிறைவான் புனல் தில்லை சிற்றம் பலத்தும் என்
சிந்தையுள்ளும்
உறைவான்"

என்று அருளுகின்ருர் மாணிக்கவாசகர்,

சிந்தையுள் செய்யும் திருநடனத்தை இறைவன் சிற்றம் பலத்தில் காட்டி யருளுகின்ற திருமேனி, திருவெழுத்து ஐந்தின் (பஞ்சாக்கரத்தின்) வடிவமாக உணரத்தக்கது என்பதையும், உண்மை விளக்க நூலால் அறிகின்ருேம். திருவெழுத்து ஐந்தும், வாசிகமாகவும், மானதமாகவும் ஜெபிக்கப்படுவன. ஆகவே, ஐந்தொழிலையும் குறித்து, ஐந்தெழுத்தின் வடிவமாய் அம்பலத்தில் நிகழ்த்தப்படும் அவ்வானந்த நடனம், ஜப நடனம் எனத் தகுவதாம். இவ்வாறே இறைவன், உயிர்களின் அகத்தும் புறத்தும் நின்று நடிக்கும் மற்ருெரு நடனம் உண்டு. அது திருவாரூரில் காணப்படுவது.

தில்லைத் திருத்தலம், 'கோயில்' எனச் சிறப்பித்து வழங்கும் முதன்மை யுடையது. அம் முதன்மைக்குக் காரணம், அங்கு இறைவன் சகளத்திருமேனி கொண்டு, ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தாகிய அனவரத தாண்டவத்தை எப்பொழுதும் இயற்றி நிற்பதேயாம்.

திருவாரூரும் தில்லைக்கு அடுத்த நிலையிலே முதன்மை பெற்று விளங்குவதொன்று. இதனை,

" மாதோர் பாகம் - திருவினுர் சேர்வதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளோ "

என்று அதன் பழைமையைக் குறிக்கு முகத்தால் அருளுகின்றுர் திருநாவுக்கரசர். திருவாரூருக்கு உளதாய இச் சிறப்பிற்குக் காரணம், தியாகேசப் பெருமான் அங்கு வீற்றிருந்தருளுவதேயாகும். இப்பெருமானும் ஒருவகை நடனத்தைச் செய்யும் பெருமானே. ஆயினும், இவரது நடனம் கூத்தப்பெருமானது நடனம் போல, எப்பொழுதும் வெளிப்படையாக விளங்குவதன்று; ஒவ்வொரு சமயத்தில் தான் வெளிப்படையாகத் தோன்றும். ஏனெனில், தியாகேசர் வெளியில் காணப்பட்டபோதிலும், அவரது நடனம் உள்ளத்தில் தான் நிகழ்கின்றது.

திருவாரூர்த் தியாகேசர் திருமாலினது நெஞ்சத் தாமரையில் இருந்தவர்; இருப்பவர். இதனை,

" பையஞ் சுடர்விடு நாகப்
பள்ளிகொள் வான்உள்ளத் தானும் "

என்று குறித்தருளினுர் நாவுக்கரசர்.

சிவபெருமானை அம்பிகையோடும் அறுமுகக்கடவுளோடும் கூடியிருப்பவராகவைத்து வழிபட விரும்பிய திருமால், அவரது திருவுருவத்தை அங்ஙனமே (சோமாஸ்கந்த மூர்த்தியாக) அமைத்து வழிபட்டுத் தமது மார்பின்மேல் வைத்தவாறே திருப்பாற்கடலில் பாம்பணையில் பள்ளிகொண்டார். அதுபோழ்து அவரது சுவாசத்தின் அசைவினுலும், பாம்பணையின் மூச்சினுலும், பாற்கடலில் உள்ள அலைகளின் அசைவினுலும் அம்பிகையோடும், குமாரக்கடவுளோடும் கூடிய சிவபெருமான் ஊஞ்சலில் இருந்து அசைந்து ஆடுபவர்போல ஆடியருளினுர்.

" நீடவே துயிலும்மால் நெட்டுயிர்ப் படைவினுல்
பீடுசேர் நாகணைப் பேருயிர்ப் படைவினல்
பாடுசூழ் தெண்டிரைப் பாற்கடல் அசைவினுல்
ஆடியே வைகினுர் அலகிலா ஆடலார் "

என்னும் கந்தபுராணச் செய்யுள் இதனைக் குறிப்பிடுகின்றது. உமையோடும், முருகனோடும் இருந்து எல்லா நலங்களை யும் தருகின்றவராதலின் அவரே, ' தியாகேசர் ' என்னும் திருப்பெயருடையவராயினுர்.

இங்ஙனம் பள்ளிகொண்டிருந்த திருமாலை இந்திரன் அணுகித் தேவர்களைத் துன்புறுத்திய, ' வாற்கலி ' என்னும் அசுரனை அழிக்குமாறு வேண்ட, அங்ஙனமே அவன்மேல் போருக்குச் செல்ல நினைத்த திருமால், தியாகேசரை இந்திரனிடம் வழிபட்டிருக்குமாறு கொடுத்துச் சென்றுர். சென்றபொழுது தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் ஆடுகின்ற பெருமானது ஆனந்த நடனத்தைத் தரிசித்து, உலகத்தை யும் மறந்து, தம்மையும் மறந்து நான்குமாதகாலம் அதீத நிலையிலே நின்றுர். அதன் பின்னர் முன்னை நிலையை அடைந்து வாற்கலியோடு போர்புரிந்து அவனை அழித்த பிறகும், தில்லையம்பலத் திருக்கூத்தினையே நினைத்துப் பாற்கடலிற் பள்ளிகொண்டார். ஆகவே அவரால் இந்திர னிடம் கொடுக்கப்பெற்ற தியாகேசர், இந்திரனிடத்திலே அவனுலே வழிபடப்பெற்று இருந்தார்.

பின்பு ' வலன் ' என்னும் அசுரனை அழிப்பதில் தனக் குப் பேருதவி புரிந்த முசுகுந்தச் சக்கரவர்த்தியை நோக்கி இந்திரன், ' நீ என்னிடம் விரும்பும் பொருள் யாது? அதனைத் தெரிவித்தால் தருகின்றேன் ' என்று சொல்ல, தியாகேசப் பெருமான் அருளாணையின் வண்ணம், முசுகுந்தன் தியாகராசரைத் தருமாறு வேண்டினுன். இந்திரன் திடுக் கிட்டு, தன் உயிரினும் சிறந்த அப்பெருமானைக் கொடுக்க மனம் இல்லாதவனுய், ' இவரை உனக்குக் கொடுக்க எனக்கு உரிமை இல்லை; திருமாலின் இசைவு இருந்தால் தரலாம் ' என்றுன். முசுகுந்தன் திருமாலிடம் சென்று

வேண்ட, அவரும் ' தியாகராாசரை நிலவுலகத்தில் கொண்டு போய் அமர்த்தி வழிபடுக ' என்று இசைவு அளித்தார். முசுகுந்தன் அதனை இந்திரனிடம் தெரிவிக்க, அப்பொழுது இந்திரன் ஒரு சூழ்ச்சி செய்து, தேவதச்சனைக் கொண்டு தியாகராாசரைப் போலவே ஆறுமுறை வேறு திருவுருவங் களை அமைத்துக் கொடுத்தான். தியாகராாசரது திருவரு ளால் அத் திருவுருவங்களை எல்லாம் முசுகுந்தன், ' இவ் வுருவங்கள் நீ வழிபட்டுவரும் தியாகராாசர் அல்ல ' என்று சொல்லி ஏற்க மறுத்தான். ஏழாம் முறையாக இந்திரன் தான் வழிபட்டுவந்த தியாகராாசரை கொண்டுவந்து வைத்து, ' இவர் நான் வழிபட்ட தியாகராாசரோ, அல்லரோ? ' என்று கேட்டான். தியாகராாசர் இந்திரன் செவியில் கேளாதவாறு ' ' நாம் உன்பால் வந்தோம்; எம்மைப் பூவுலகத்தில் கொண்டு போய் வைத்துப் பூசிக்க ' என்று அருளிச்செய்தார். அதனால், முசுகுந்தன், 'இவர்தாம் திருமாலாலும், உன்னா லும் வழிபடப்பெற்றவர்; ஆதலின், இவரைத் தருக ' என்றான், இந்திரன். 'இவரோடு, உன்பொருட்டு அமைந்த ஏனை அறுவரையும் உடன் கொண்டு செல்க' என்று ஏழு தியாகர்களையும் கொடுத்தான். முசுகுந்தன். ' நல்லது ' எனச் சொல்லிப் பெற்றுக்கொண்டு வந்து, திருமால் மார்பி லிருந்து அசைந்தாடிய தியாகரைத் திருவாரூரில் அமர்த்தி; ஏனைய அறுவரையும் தனது நாட்டில் உள்ள வேறு ஆறு தலங்களில் அமர்த்தினான். அத்தலங்கள் இவை என்பதை,

> " கடல்நாகை, நள்ளாறு, காருயில், கோளரியூர்,
> *மடநாகம் முத்தினும் வாய்மியூர், மறைக்கானம்,*
> *உடனாகுந் தலம்ஆறில் ஓர்ஆறு வடிவுகொண்ட*
> *படநாக மதிவேணிப் பரஞ்சுடரை அமர்வித்தான் "*

என்ற கந்தபுராணச் செய்யுள் நன்கு விளக்குகின்றது.

(கோளரியூர் - கோளிலி. வாய்மியூர் – வாய்மூர். மறைகானம் – மறைக்காடு.)

இந்த ஆறோடு திருவாரூரும் கூடிய ஏழு தலங்களே, ' சப்தவிடங்கஸ்தலங்கள் ' எனப் படுகின்றன. என்றாலும்

திருமால் மார்பின்மீதமர்ந்து அசைந்தாடிய தியாகராசர் எழுந்தருளி யிருப்பது திருவாரூரே. அவர், தாமே விரும்பித் தேவர் உலகத்தை விடுத்துத் திருவாரூரை அடைந்து வீற்றிருப்பதால்: அவரை அப்பர் பெருமான்,

" அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட அம்மான் "

என்கின்றார். தியாகராசர் திருமால் மார்பிலிருந்து ஆடாது ஆடிய ஆடலே, 'அஜபா நடனம்' எனப்படுகிறது.

திருமாலது மார்பின்மேலிருந்து அவரது மூச்சுக் காற்றின் அசைவினால் ஆடினார் தியாகராசர் என்பது எதனைக் குறிக்கின்றது? உயிர்களது மூச்சினை இயக்கி, அவைகளது உணர்வை இயக்குபவனும் இறைவனே என்பதைத்தான் குறிக்கின்றது. மூச்சினை இயக்கும் வித்தெழுத்துக்கள் (பீஜாட்சரங்கள்) இரண்டு என்று சொல்லப்படும். அவை, 'அம்' என்பதும், 'சம்' என்பதுமாகும். அவை இரண்டையும் கூட்டினால், 'அம்சம்' என்று ஆவதால், அவற்றிற்கு, 'அம்ச மந்திரம்' என்பதுபெயர், இது, மற்றைய மந்திரங்கள் போல வாயாற் சொல்லி ஜெபிக்க வேண்டாது, மூச்சின் இயக்கத்திலே இயற்கையாய் அமைவதால், 'அஜபா மந்திரம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, உயிர்களின் மூச்சுக் காற்றினை இயக்கிநிற்கும் தியாகராசரது அசைவு, அஜபா நடனமாயிற்று.

தில்லையம்பலத்துள் அம்பலவாணர் செய்கின்ற நடனம், நன்கு ஜெபிக்கப்படுகின்ற ஐந்தெழுத்தின் வடிவாதலால், அதனைச்செய்கின்ற பாதங்கள் யாவரும் காணத்தக்கனவாய், கண்டால் முத்திதருவனவாய் அமைந்துள்ளன. திருவாரூரில் தியாகராசர் செய்கின்ற நடனம் ஜெபிக்கப்படாத அம்சமந்திரத்தின் வடிவாதலால், அதனைச் செய்கின்ற பாதங்கள் காணப்படாதனவாய், நெஞ்சினுள் கருதியுணரத் தக்கனவாய், கருதுவார்க்கு எல்லா நலங்களையும் அருளுவனவாய் உள்ளன. அத்தகைய அரிய திருப்பாதங்களைக் காணும் நாளும் ஒன்றுள் உண்டு; அதுவே பங்குனி உத்திரத் திருநாள், இந்நாளை முன்னிட்டவிழா, 'உருத்திரபாத

மகோற்சவம்' என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் திருவாரூர்த் தியாகராசர், வீதிவிடங்கராய் நடந்துலாவுவர். அந்த அஜபா நடனத்தைக் காணத் திருமால் முதலிய தேவர்களும் வந்து நெருங்கியிருப்பர்.

" குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடி "

ஏனை அடியவர் பலரும் எம்மானுக்குப் பல்லாண்டு கூறுவர்.

தியாகராசப் பெருமான் அடியவர்களுக்கு நலங்கள் பலவும் தருதற்பொருட்டு அவர்கள் உள்ளத்தில் தோன்றாத் துணையாய் வைத்திருக்கும் தமது திருவடிகளை வீதி விடங்கராய் வந்து தோற்றுவிக்கும் இந்தப் பங்குனித் திருநாள் விழாவைக் காணாது விட்டிருக்க இயலாமையாலே, சுந்தர நாயனார் தமது சூளுறவையும் கடந்து, திருவொற்றியூரை விட்டுத் திருவாரூரை நோக்கிப் புறப்பட்டார்.

இத்தகைய அரிய திருநாள் மிகஅண்மையிலே நிகழ்ந்தமையின், அதன்கண் ஆரூர்த்தியாகரது அஜபா நடனத்தைக் கண்டு வணங்கிய காட்சி அடியவர் உள்ளத்தில் என்றும் நீங்காது, அவர்களது உயிர்ப்பும், உயிருமாய்நின்று நிலவுதல் திண்ணமாம்.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

ஆலவாய்ச் சொக்கலிங்கம்

ஆலம் தரித்தலிங்கம்; ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
மத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா.

— குருஞானசம்பந்தர்.

உயிர்கள் பசுக்கள்; இறைவன் அப்பசுக்களைக் காக்கும் பதி. 'பசுக்கள்' என்பதற்கு, 'பாசத்தால் கண்டுண்டவை' என்பது பொருள். கட்டில் அகப்பட்ட எந்த உயிரும், அந்தக் கட்டினின்றும் விடுபட முயலுதல் இயல்பு. கட்டில் அகப்பட்ட உயிர் அதிலேயே இருக்க விரும்பாமல், விடுபட முயல்வது ஏன்? கட்டில் அகப்பட்ட உயிர் தன் விருப்பப்படி இயங்க முடியாமலும், விரும்பியதை அடைந்து அனுபவியாமலும் அக்கட்டுத் தடை செய்கின்றது. அதனால், அதனின்றும் அவ்வுயிர் விடுபடவே விரும்பி முயல்கின்றது. அங்ஙனமே உயிர்கள் அனைத்தும் இயல்பாகவே அகப்பட்டுள்ள பந்தத்தினின்றும் விடுபடவே முயல்கின்றன. ஆயினும் அந்நிலை வெளிப்படையாகத் தெரிவதில்லை.

மக்கள், இல்லங்களில் வளர்க்கப்படும். பசுக்களைக் கட்டியிருக்கும் கயிறும், அவற்றால் அவை கட்டப்பட்டு நிற்பதும் காட்சிப் புலனாய்த் தெரிகின்றன. ஆனால், உயிர்களைப் பிணித்துள்ள பாசமும், அவற்றால் அவை கட்டுப்பட்டுக் கிடப்பதும் அவ்வாறு காட்சிப் புலனாய்த் தெரியவில்லை. ஆயினும், உற்று நோக்கினால் அவை நன்கு புலனாகும்.

" வளம்பட வேண்டாதார் யார் யாரும் இல்லை "

என்றபடி, 'இன்பமாய் வாழவேண்டும்' என்று விரும்பாதவர் யாரேனும் உளரோ? இல்லை. ஆனால், அவ்வின்ப வாழ்க்கையை அவரவர் விரும்பியபடியே அடைய முடிகின்றதா? 'இல்லை' என்பது சொல்ல வேண்டா. அங்ஙனம் விரும்பிய இன்பத்தை அடைய முடியாததனோடு, விரும்பாத துன்பத்தை நீக்கிக் கொள்ளவும் இயலவில்லை. இந்நிலைதான் பந்தம் அல்லது கட்டு. இது கண்ணுக்குத் தோன்றாமலே நம்முடன் இருந்து நம்மைப் பிணித்துக்கொண்டு நிற்கிறது.

காட்சிக்கு வராத இந்தக்கட்டு, நம்முடைய உடம்பை - கை கால்களைக் கட்டியிருக்கவில்லை. நம் அறிவையே பிணித்துள்ளது. அந்தப் பிணிப்பே ஆணவம். அது முதலில், எந்த ஒன்றையும், ஒரு சிறிதும் அறியவொட்டாமல் முழு மூடமாகிய பெரிய இருள் நிலையில் இருக்கச் செய்கின்றது. இந்நிலையை, 'கேவலநிலை' என்பர்.

இவ்வாறு பிணிப்புண்டு கிடக்கும் பசுக்களின் நிலையைப் பதியாகிய இறைவன் கண்டு தனது திருவுளத்தில் இயற்கையாய் எழுந்த பெருங்கருணையினால், இருளுக்கு மாற்றாய விளக்குப் போன்ற மாயை கன்மங்களைக் கூட்டினான். அவை முறையே கருவிகரணங்களையுடைய உடம்பாயும், அவற்றால் நிகழும் முயற்சியாயும் உருவெடுத்தன. அவற்றால், உயிர்களின் அறிவை இறுகப் பற்றியிருந்த ஆணவத்தின் ஆற்றல் சிறிது மெலியப் பெற்று, அறிவு சிறிது நிகழ்வதாயிற்று. விளக்கு வந்த காலத்தில் இருள் சிறிது நீங்குமன்றி முற்றிலும் நீங்காது. அதனால், பொருள்களின் உண்மையும் சிறிது புலப்படுமேயன்றி நன்கு புலப்படாது. ஒரு பொருள் மற்றொரு பொருளாய்த் தெரியும். ஒரு நிறம் மற்றொரு நிறமாய்த் தோன்றும். அதுபோலவே, மாயை கன்மங்களால் ஆணவம் சிறிது நீங்குமேயன்றி, முற்றிலும் நீங்காது. அதனால் பொருளின் இயல்புகளும் சிறிது விளங்குமேயன்றி, முற்றிலும் விளங்கமாட்டா. தீப்பொருள் நற்பொருளாய்த் தோன்றும்; நற்பொருள் தீப்பொருளாய்த் தோன்றும். சிறியார் உரை உண்மையாய்ப்படும்; பெரியோர் உரை உண்மையன்றாய்த் தோன்றும். இந்நிலையைச் சாத்திரங்கள், 'சகலநிலை' என்று கூறும். கேவல நிலையில் அறிவே

நிகழாமையின், அப்பொழுது உள்ளது அஞ்ஞானமாகும். சகல நிலையில் அறிவு தவறான முறையில் நிகழ்வதால், அப்பொழுது உள்ளது 'விபரீத ஞானம்' எனப்படும். விபரீத ஞானத்தையும், 'அஞ்ஞானம்' என்று கூறுவதில் தவறில்லை.

ஆணவம் அறிவுக்கு நேர் பகைப்பொருளாய் அதனை மறைத்து நிற்றலால், அது 'பிரதிபந்தம்' எனறும், கன்மம் அதன்பின்னதாய் அறிவைத் தவறான வழியில் இயக்குதலால், அது, 'அநுபந்தம்' என்றும் மாயை, கன்மத்திற்குப் பற்றுக் கோடாய் நின்று அதனை நன்கு நிகழச் செய்தலின், அது 'சம்பந்தம்' என்றும் சொல்லப்படும். எப்படியாயினும் எல்லாம் பந்தமே. அதனால் அவற்றினின்று விடுபட்டாலன்றி இன்பம் இல்லை.

பந்தத்தால் விளைவது என்ன? பிறப்பு. தேவர் முதல் தாவரம் ஈறாகப் பிறப்பு எழுவகைப்படும். எழுவகைப் பிறப்புக்களுள் யாதொரு பிறப்பிலும் இன்பம் இல்லை துன்பமே உள்ளது. எழுவகைப் பிறப்புக்களுள் தெய்வப் பிறப்பு சிறந்தது எனப்படும். அதனை அடைந்த தேவர்களும் அசுரர் முதலியோரால் எத்தனையோ துன்பங்களை அடைந்தமையைப் புராணங்களிற் கேட்கின்றோம். மக்களும், மற்றைய பிறப்புக்களும் பசி, பிணி, மூப்பு, இறப்பு, பகை என்பவற்றால் அல்லல் உறுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். அவ்வாறானபின்பு எந்தப் பிறப்பில் இன்பம் இருக்கின்றது? எதிலும் இன்பம் இல்லை. துன்பந்தான் உள்ளது. ஆகவே, பிறப்பை நீக்கிக்கொள்ள முயல்வதுதான் மக்கள் உடம்பு எடுத்ததனால் அடையும் மாண்புறு பயன். அதற்கு வழியாது? பிறப்பில்லாதவனாகிய இறைவனை மனமொழி மெய்களால் வழிபடுதல் ஒன்றே பிறவி நீங்குதற்கு வழி. 'பிறப்பிற்கு ஏதுவாவன வினைகள்' என்பதை ஆன்றோர் அனைவரும் உடன்படுவர். அவ்வினைகள் நீங்குவதற்குத் திருவள்ளுவ நாயனார் என்ன வழி கூறுகின்றார்?

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்கின்றார். 'பிறப்பிற்குக் காரணமான நல்வினை, தீவினை என்னும் இருவகை வினைகளும் வந்து சேராதிருக்கவேண்டுமாயின், இறைவனது பொருள் சேர்ந்த புகழை இடைவிடாது

அன்போடு சொல்லுதல் வேண்டும்' என்று கூறுகின்றார். இதனைத்தான், 'தோத்திரம்' என்கின்றோம். இறை வழிபாட்டில் தோத்திரம், சிறந்த ஓர் இடத்தைப் பெறுகின்றது. மொழியால் வாழ்த்துதலை இக்குறளிற் கூறிய அவர் மனத்தால் அவனை நினைத்தலையும் தலையால் அவனை வணங்குதலையும் வேறு குறள்களிற் கூறியுள்ளார்.

'' வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல ''

என்ற குறள், நினைத்தலைக் கூறியவற்றுள் ஒன்று.

'' கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை ''

என்பது, வணங்குதலை வற்புறுத்தியது. இறைவனை நினைத்தல், வாழ்த்தல், வணங்கல் என்னும் இவைகளே அவனை வழிபடுதலாகும் என்பதை,

'' வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே ''

என்ற அப்பர் அருள் வாக்கு நன்கு விளக்குகின்றது.

இங்ஙனம் இறைவனை மனத்தால் நினைதலும், வாக்கால் வாழ்த்தலும், காயத்தால் வணங்குதலும் உருவத்தில் வைத்து வைத்தன்றி இயலாது என்பதனைக் குறிக்கவே, கடவுள்வாழ்த்துக் குறள் பலவற்றில், '' இறைவன் அடி '' என்றும், '' தாள் '' என்றும் திருவள்ளுவர் குறித்துள்ளார். இன்னும், 'அன்பு காரணமாக இறைவனை யார் யார் எந்த எந்த உருவில் நினைப்பினும் அந்த அந்த வடிவத்தில் நின்று அவரவர்களுக்கு அருள் புரிகின்றான் இறைவன்' என்பதை '' மலர்மிசை ஏகினான் '' என்னும் தொடரால் அவர் குறித்திருக்கின்றார்.

அன்பினால் நினைவார் பொருட்டு இறைவன் கொள்ளும் எல்லா வகையான வடிவங்களுக்கும் முதலாய் மூலமாய் நிற்பது இலிங்கத் திருமேனி. ஆதலால், ஆன்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் பெரியோர்கள் இறைவனை இலிங்கத் திருமேனியில்

தான் சிறப்பாக வழிபடுகின்றார்கள். திருக்கோயில்களில் மூல மூர்த்தியாய் விளங்குவதும் இலிங்கத் திருமேனியே. சிவபெருமான் ஒருவரே யாவராலும் வணங்கத் தக்கவராதலின், இவ் விலிங்கத் திருமேனி சிவபெருமானுக்கே உரிய திருமேனியாயிற்று. அதனால், இலிங்கத்தை, ''சிவலிங்கம்' என்றே குறிப்பிடுவர்.

'' காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் பூண்டார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் '

என்று சேக்கிழாரும் அருளுகின்றார்.

ஆங்காங்குச் சிவதலங்களில் உள்ள திருக்கோயில்களில் விளங்கும் இலிங்கத் திருமேனிகள் பரார்த்தமாக வழிபடப் படுபவை. அவை ஒவ்வொருவரால் பிரதிட்டிக்கப்பட்டும் தானே தோன்றியும் விளங்கும். தானே தோன்றி விளங்கும் இலிங்கம் ' சுயம்புலிங்கம் ' எனப்படும். பிறரால் பிரதிட்டிக்கப்பட்டவை களில், இருடிகளால் பிரதிட்டிக்கப்பட்டவை, ' ஆரிடலிங்கம் ' என்றும், மற்றைய மனிதரால் பிரதிட்டிக்கப்பட்டவை, ' மானுட லிங்கம் ' என்றும், தேவர்களால் பிரதிட்டிக்கப்பட்டவை, ' தைவதலிங்கம் ' என்றும், அசுரர்களால் பிரதிட்டிக்கப் பட்டவை ' ஆசுரலிங்கம் ' என்றும், அரக்கர்களால் பிரதிட்டிக் கப்பட்டவை, ' இராக்கதலிங்கம் ' என்றும் சொல்லப்படும் பிரதிட்டித்தவர் தகுதி வேறுபாடுபற்றி, அவ்வவ்விலிங்கத்திற் கும் உயர்வு வேறுபாடு கூறப்படும். எல்லா இலிங்கங்களிலும் தானே தோன்றிய சுயம்பு லிங்கமே மேலானது. மேற்கூறிய பலரால் பிரதிட்டிக்கப்பட்ட இலிங்கங்களும், சுயம்புலிங்கங்களும் சிலதலங்களில் ஆங்காங்குக் காணப்படும். பிரதிட்டை செய்யப் பட்ட இலிங்கங்கள் அனைத்திற்கும் சுயம்புலிங்கங்கள், ' மூலம் ' எனப்படும். சுயம்புலிங்கங்கள் அனைத்திற்கும் மதுரையில் உள்ள சுயம்புலிங்கம் மூலமானது என்பதைத் திருவிளையாடற் புராணம் விளக்கமாகக் கூறும். அவ்விளக்கத்திற்கு மூலமாய் அமைந்தது.

' முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி ''

என்னும் அப்பர் திருவாக்காகும். அந்த மூலலிங்கமே எங்கள் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கு ஆன்மார்த்த மூர்த்தியாய் அமைந்தது. அதனால், அந்த மூர்த்தியையே

அவர்கள் என்றும் எப்பொழுதும் எல்லாப் பொருளுமாகப் போற்றி வழிபட்டார்கள். தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியின்மீது அவர்கள் அருளிச்செய்த அரியநூலே, 'சொக்கநாத வெண்பா' என்பது அது, நூறு வெண்பாக்களையுடையது. அவையெல்லா வற்றிலும் அரிய மணியாய் அமைந்த வெண்பாவே முதலில் கொடுக்கப்பட்டது.

மற்றைய தலங்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கு வேறு வேறு வகையான பெயர்கள் உள்ளன. ஆனால், மதுரையில் எழுந்தருளியுள்ள மூலலிங்கமாகிய மூர்த்திக்கு, 'லிங்கம்' என்பதே; அஃதாவது 'சொக்கலிங்கம்' என்பதே பெயராய் அமைந்தது. சொக்கு - அழகு. அழகாவது, ஒளிவடிவமே. அழகுக்குச் 'சுந்தரம்' என்ற பெயர் இருப்பதால் சொக்கலிங்கம், 'சுந்தரலிங்கம்' என்றும் போற்றப்படுகிறது. அவ்விலிங்க மூர்த்தியைப் பலபடியாக எங்கள் பரமாசாரியர் போற்றும் அழகினை மேற்காட்டிய வெண்பாவில் நன்கு காண்கிறோம்.

அமரர்களை அமரர்களாய் வாழச் செய்தது, ஆலவாய் அண்ணலின் அருள்நீலகண்டம். அன்று உண்டாகிய ஆலகால விடத்தை இறைவன் உண்ணாதிருந்தால், அமரர்கள் என்ற பெயரே இல்லாது போய் இருக்கும். இதைக் குமரகுருபரர்,

" நாம் தேவர் என்பார் — தம்பாவையர்க்கு அன்று
காதோலை பாலித்த தயவாளர் "

என்று குறிக்கின்றார். ஆலகாலத்தை உண்ட அருஞ்செயல் இறைவனது பேரருளையும் பேராற்றலையும் நன்கு விளக்குகின்றது. அதனால், அந்த அரியசெயலையே முதலில் நினைந்து, 'ஆலம் தரித்த லிங்கம்' என்று அருளினார்கள். ஆலம் தரித்த பெருமான் இந்நிலவுலகத்தில் எழுந்தருளியிருப்பதும் ஆலவாய்க் கோயிலாகவேயுள்ளது என்னும் நயத்தினை, 'ஆலவாய்ச் சொக்கலிங்கம்' என்று விளக்குகிறார்கள். ஆலம் - நஞ்சு பொருந்திய வாயினை உடைய பாம்பு ஒன்று, பாண்டியன் ஒருவனுக்கு எல்லை காட்டினமை பற்றி, 'ஆலவாய்' என்ற பெயர் உண்டாயிற்று என்பதைத் திருவிளையாடற் புராணம் கூறும்.

இந்த ஆலவாய்ச் சொக்கலிங்கமே எல்லா இலிங்கங்கட்கும் மூலலிங்கம் என்பதை, 'மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம்'

என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மூல இலிங்கமே மற்றைத் தலங்களிலெல்லாம் காணப்படுகிறது என்று சொக்கலிங்கத்தின் பெருமையை வியக்கின்ற அழகு பெரிதும் போற்றத்தக்கது.

செம்மேனி அம்மானாகிய சிவபிரான் பால்போலும் வெண்ணீற்றை அணிந்து விளங்குவதை 'பாலொளியாம் மத்தனே' என்கின்றார்கள். ஆன்மார்த்த மூர்த்தி பால்போலும் படிகத் திருமேனியாய் இருப்பதும் இங்குக் கருதத்தக்கது. மேனி முழுதும் பால்போல் விளங்க, அதனிடையே கண்டம் நீல நிறமாய் விளங்குவதும் அழகிய சொக்கற்கு இன்னும் பேரழகினைத் தருவதாகும். மத்தன - உன்மத்தன்; பித்துக்கொண்டவன். பித்துக்கொண்டிராவிடில் நஞ்சினை உண்பானோ? குமரகுருபரரும் "நஞ்சுண்டு பித்துண்டு" என்றார். பித்துண்டிருந்தமையால்' நஞ்சுண்டான்' என்று நகைச்சுவைபடக் கூறியபோதில் 'பித்து' என்பதற்கு உண்மையானபொருள், 'பேரருள்' என்பதே உயிர்களிடத்துப் பெரிய கருணை இறைவனுக்கு இல்லாவிடில், அவன் நஞ்சத்தைத் தான் உண்டு, அமுதத்தைப் பிறருக்கு அளித்தருள்வானோ என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

'மத்தனே' என்று குறிப்பாகக் கூறியதனை வெளிப்படையாகத் தெரிவித்தற்கு, "உமையாள் அத்தனே" என்று அருளினார். அருளே உமையவள். அத்தன - தலைவன். இத்தகைய பெருமான் மதுரைத் திருத்தலத்தில், ஆலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருத்தலை, "மதுராபுரி உமையாள் அத்தனே! ஆலவாயா" என்று அருளுகிறார்கள். 'பாலொளியான அருளாளனே! உமையவளுக்குத் தலைவனே, மதுராபுரியில் திரு ஆலவாயில் எழுந்தருளியிருப்பவனே நீ, ஆலந்தரித்தலிங்கமாய், ஆலவாய்ச் சொக்கலிங்கமாய், மூலமாய் எங்கும் மூலத்தலிங்கமாய் எழுந்தருளியிருக்கின்றாய்' என்று போற்றுகிறார்கள்.

இவ்வாறு போற்றி இலிங்கத் திருமேனியில் இறைவனை எல்லாம் அவனேயாக வழிபடுவதனால், தங்களுக்கு ஆகாமியம் ஏற வழியில்லை என்பதை "ஆட்டுவதும் நீயானால் ஆகாமியம் என்பால் - சாட்டுவதென் சொக்கநாதா" என்று முன்னே ஒரு பாடலில் விளக்கினார்கள். 'உன்னை வழிபட்ட பலருக்கு முத்தி கொடுத்த உனது திருவருள், என்னிடத்தில்மட்டும் சும்மா இருப்பதென்னவோ' என்றும், மகவின் வருத்தத்தைக்

கண்டு தாய் பொருததுபோல, உயிர்களின் வருத்தத்தைக்கண்டு உனது திருவுளம் பொறுக்குமோ' என்றும், 'என்னை வீடடையச் செய்வையோ! அல்லது பிறப்பெடுக்கச் செய்வையோ! நான் அறியேன்; எது செய்தாலும் அது உனது திருவருட்செயல் தான்' என்றும் விண்ணப்பித்து, இலிங்கத் திருமேனியின் சிறப்பையெல்லாம் இப்பாடலில் விளக்கிப் போற்றுகின்றார்கள். இப்பாடல்களை நாமும் உள்ளம ஒருங்கி ஓதி உணர்ந்து, பாலொளியாம் ஆலவாய்ச் சொக்கலிங்கத்தை அன்புடன் வழிபட்டு ஆகாமியத்தினின்றும் நீங்கி உய்தி பெறுவோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaidhianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

I feel tremendously thrilled whenever I visit this temple to offer poojas for our family deity Lord Vaideeswara. I have also great appreciation for the temple authorities who take pains to keep this great temple clean. We extend our grateful thanks for the facilities given to us in having a very good dharshan of Lord Vaideeshwara.

(Sd.) M. Raghupathy, I. A. S.

24—3—66. Joint Director, State Transport and
Dy Commissioner, civil supplies (Transport)
Transport House Mount Road, Madras-2

I was greatly moved by the beautiful atmosphere of this temple which I visited for the first time today. The management were all courtesy and I am most grateful to them.

(Sd) N. Krishnaswamy.

31—3—'66. D. I. G. Rys. & Armed Police,
Madras.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 25, இதழ் 4, பக்கம் 133 இன் தொடர்ச்சி)

கருவிக் கூட்டம் உயிராகாமை

மாணாக்கன் : 'ஐம்பொறிகள், பிராணவாயு' என்னும் புறக் கருவிகளும், அந்தக் கரணமாகிய அகக் கருவிகளும் ஆகிய அனைத்தும் சடப் பொருள்களேயாதலின், அவற்றுள் ஒன்றேனும் சித்துப் பொருளாகிய உயிராகாது என்பது தெளியப்பட்ட பின்பு, மேலும், 'இது உயிரோ' என மயங்குதற்கு வேறு எந்தச் சடப்பொருள் உள்ளது ? ஒன்றும் இல்லையன்றே !

ஆசிரியர் : இல்லைதான் ; ஆயினும், சிலர், 'ஐம்பொறிகள் முதலாகக் காட்சிப் பொருளாய் விளங்கும் கருவிகளும், மனம் முதலாகக் கருத்துப் பொருளாய் விளங்கும் கருவிகளும் ஆகிய அனைத்தும் கூடிய தொகுதியே உயிர்' என்பர். அவர்கள் கூறுமாறு இது;

'தூலமாயும் சூக்குமமாயும் உள்ள அனைத்துக் கருவிகளும் கூடியவழியே அறிவும் செயலும் நன்கு நிகழ்கின்றன. அவற்றுட் சில குறையின், அறிவும் செயலும் குறைதலையும், பல குறையின், அவை நிகழாமையையும் காண்கின்றோம். இன்னும் சிறப்புடைய கருவி ஒன்றிரண்டு குறையினும் அறிவும் செயலும் தடைப்படுதலையும் காண்கின்றோம். ஆகவே, அனைத்துக் கருவிகளும் கூடிய கூட்டமே உயிர். அக்கூட்டத்திற்கு வேறாய் உயிர் என்பது ஒன்று உளது என்றற்கு ஏதுவில்லை;

மாணாக்கன் : ஆம் ! 'உயிர் சித்துப் பொருள்-அஃதாவது அறிவுடைப் பொருள்' என்கின்றோம். ஆயினும், அதனைத் தூலமாயும், சூக்குமமாயும் உள்ள சடப்பொருள்கட்கு வேறாகக் காண இயலவில்லையே ! அஃது இயலாதபொழுது, 'கருவிகள் அனைத்தும் கூடிய தொகுதியில் உண்டாகின்ற ஓர் இயக்கந்தான் உயிர்' என்பவரது கொள்கையை மறுத்தல் எவ்வாறு ?

ஆசிரியர் : உயிர் காட்சிப் பொருளாகக் காணப்படாமையின், 'கருவித் தொகுதியே உயிர்' என்பாரது கூற்றினைக் கண்டுணரும் காட்சியளவையான் மறுத்தல் கூடாதாயினும், உய்த்துணரும் கருதலளவையால், நன்கு மறுத்தல் கூடும்.

மாணாக்கன் : அஃது எவ்வாறு ?

ஆசிரியர் : தொகுதியாய்க் கூடி நிற்கும் கருவிகளைத் தனித் தனியே காணுங்கால், அவை, 'கண், காது, கை, கால், முகம், மனம்' என்று சொல்லப்படுகின்றனவேயன்றி, ஒன்றேனும், 'உயிர்' அல்லது ஆன்மா' என்று சொல்லப்படுகின்றதோ ?

மாணாக்கன் : இல்லை. அதனால் மேற்கூறிய கொள்கைக்கு வரும் குற்றம் யாது? எல்லாக் கருவிகளும் ஒருங்கு கூடிய கூட்டத்தைத்தானே அவர்கள் உயிர் என்கின்றனர் ?

ஆசிரியர் : ஆம் ! அஃது உண்மையே. கருவிகள் தனித் தனியாக நிற்கும் பொழுது ஒன்றேனும் உயிர் என்று பெயர் பெறாது, வேறுவேறு பெயர் பெறுதல்போலவே, அவை ஒருங்கு கூடிய பொழுதும் உயிர் என்று பெறுவதில்லை; வேறு பெயரே பெறுகின்றன என்பதை விளக்கவே அதனைக் கூறினேம்.

மாணாக்கன் : கருவிகள் அனைத்தும் ஒன்றாகத் திரண்டு கூடியபொழுது என்ன பெயரைப் பெறுகின்றன ?

ஆசிரியர் : அவை ஒன்றாகக் கூடி நிற்கும் பொழுது, 'உடம்பு' என்று சொல்லப்படுவதை மறந்துவிட்டனையோ ?

மாணாக்கன் : ஆம் ! ஆம் ! மறந்துதான் வினவினேன். அவ்வாறு அவை, 'உடம்பு' என்ற பெயராற் சொல்லப் பட்டால்தான் என்ன ? அங்ஙனம் பெயர்பெற்ற அத்தொகுதி தானே உயிர் என்று கொள்ளுதல் கூடாதோ ?

ஆசிரியர் : அங்ஙனமாயின், 'உயிர்' என்பதும், 'உடம்பு' என்பதும் ஒரு பொருட் சொற்களோ ?

மாணாக்கன் : இல்லை; 'உடம்பு' என்பதும் 'உயிர்' என்பதும் வேறு வேறு பொருளைக் குறிக்கும் சொற்கள்தாம்.

ஆசிரியர் : நல்லது! 'உடம்பு' என்னும், சொல்லும் 'உயிர்' என்னும் சொல்லும் வேறு வேறு பொருளைக் குறிக்க அமைந்த

சொற்களானபொழுது, 'உடம்பு' என்னும் சொல்லாற் குறிக்கப்படும் பொருளை, 'உயிர்' என்னும் சொல்லாற் குறிக்கப்படும் பொருளாகக் கொள்ளுதல் எவ்வாறு? அங்ஙனங் கொள்ளுமாறில்லை. ஆகவே, கண், காது முதலிய சொற்களாற் குறிக்கப்படும் பொருள்கள் உயிராகாமைபோலவே, 'உடம்பு' என்னும் சொல்லாற் குறிக்கப்படும் பொருளும் உயிராகாது என்பது தெளிவாகும்.

மாணுக்கன் : ஆம்! அடிகள் அருளிச்செய்வது பொருத்தமானதாகவே தெரிகின்றது. ஆயினும், இவ்வாறு சொற்பற்றியுணராது, பொருள் பற்றியே அவர்தம் கொள்கை பொருந்தாமையை உணர வழி உண்டோ?

ஆசிரியர் : உண்டு. கருவிகள் தனித்து நிற்பினும், ஒருங்கு கூடி நிற்பினும் எக்காலத்தும் அவை சடமன்றிச் சித்தாகா. அஃதாவது, எந்நிலையிலும் கருவிகள் அறிவில்லாத பொருள்களே யன்றி, அறிவுடைய பொருள்களல்ல. அறிவில்லாத பொருள்களிலிருந்து அறிவு தோன்றமாட்டாது. ஆகவே, அனைத்துக் கருவிகளும் ஒருங்கு கூடி நிற்பினும், அவற்றிலிருந்து அறிவு உண்டாமாறில்லை. அத்தொகுதிகளிடமாக நிகழும் அறிவு, அவை அனைத்திற்கும் வேறனதேயன்றி, அவற்றில் உள்ளதன்று. அதனால், அவ்வறிவுப் பொருளாகிய உயிர், அத்தொகுதியின் வேறனதேயாம்.

மாணுக்கன் : சடப்பொருளினின்றும் அறிவு தோன்ருது என்பது எப்படி? பல்வேறு வகைப்பட்ட சடப்பொருள்கள் ஒன்ருகக் கலக்கும்பொழுது, அவற்றுள்ஒன் றல்லாத புதியதொரு பொருள் அக்கலவையினின்றும் தோன்றக் காண்கின்ருேமன்ருே? எடுத்துக்காட்டாக, மஞ்சட்பொடியும், சுண்ணும்பும் ஒன்ருகக் கலந்தால், அக்கலவையில், முன் இல்லாத ஒரு சிவப்பு நிறம் தோன்றுகிறது. பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு என்பன ஒன்றுபட்டால், அவற்றினின்றும் முன்பு இல்லாத சிவப்பு நிறம் உண்டாகின்றது.

ஆசிரியர் : அறியாது வினவுகின்ருய்! எவ்வாறு எனின், மஞ்சட் பொடியில் உள்ளது ஒரு நிறம்; சுண்ணும்பில் உள்ளது மற்ருெரு நிறம். இரண்டு நிறங்கள் ஒன்ருய் இயையும் பொழுது, மூன்ருவது ஒரு நிறம் தோன்றுகின்றதேயன்றி, வேறுபொருள் ஒன்றும் தோன்றவில்லை. அஃதாவது, மஞ்சட் பொடியும், சுண்ணும்பும் ஒன்றுசேரும்பொழுது, குங்குமம்,

சந்தனம்போன்ற பொருள் ஒன்றும் தோன்றிவிடவில்லை. அவ்வாறே, பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு என்பன சேரும்பொழுதும் அம்மூன்றின் நிறத்தினின்றும் நான்காவதான ஒருநிறம் தோன்றுகின்றதேயன்றி, ஏலம், கிராம்புபோன்ற புதிய ஒரு பொருள் தோன்றவில்லை. இன்னும் நன்கு நோக்கினல், மேற்காட்டிய உதாரணங்களில், தனியாய் உள்ள சில நிறங்கள் ஒன்ருய் இயையும்பொழுது, அந்நிறங்களே வேருெரு நிறமாய் மாறிக் காட்சியளிக்கின்றனவன்றி, அவைகள் அப்படியே இருக்க, மற்ருெரு புதிய நிறம் அங்குத் தோன்றிவிடவில்லை என்னும் உண்மை புலனுகும். ஆகவே, தனித்தனியாய் உள்ள கருவிகள் ஒன்ருய் இயையும்பொழுது, அவைகளே வேருெரு கருவியாய் மாறிநிற்குமன்றி, அவற்ருேடு தொடர்பில்லாத அறிவு அவற்றினின்றும் தோன்ருது என்பதும் விளங்குவதாகும். எனவே காரணத்தினின்றும் காரியம் தோன்றுங்கால், அதனேடு இயைபுடைய காரியம் தோன்றுமன்றிக் காரணத்தின் தன்மைக்கு முரணுன தன்மையையுடைய காரியம் தோன்ருது. இது சற்காரிய வாதத்தில் நன்கு விளக்கப்பட்டது. அறிவு, சடத்திற்கு நேர்மாருனதாகலின், அது சடப்பொருள்களின் கூட்டத்திலிருந்து தோன்றுதல் என்பது எவ்வாற்ருனும் இயலாது.

இன்னும் சடப்பொருள்கள் பலகூடி ஒன்று மற்ருென்றுக்கு உதவ, அவை இயங்கும் தன்மையைப் பெறுமாயினும், அவ்வியக்கம் ஒழுங்குடையதாய் இராது. இயக்குவோன் ஒருவன் அவற்றைப்பற்றி இயக்குவானுயின், அவ்வியக்கம் ஒழுங்குடையதாய் இருக்கும். அவ்வியக்குவோன், அவற்றினின்றும் வேறுபட்டவனுய் இருக்கமுடியுமன்றி, அக்கருவிகளில் அவனும் ஒருவனுய் இருத்தல் இயலாது. எடுத்துக்காட்டாக, நிலத்திலாயினும், நீரிலாயினும், வானத்திலாயினும் ஓடக்கூடிய இயந்திரம் ஒன்றை அவ்விடத்தில் இயக்கிவிட்டுவிட்டால், அதுவே தீங்கு எதுவும் இன்றிச் சென்று குறித்த இடத்தை அடைந்து பயனைத் தருதல் இயலாது. இயக்குவோன் ஒருவன் அவ்வியந்திரத்துள் இருந்து அதனை இயக்குவானுயின், அது தீங்கின்றி ஒழுங்காய்ச்சென்று குறித்த இடத்தை அடைந்து பயனைத்தரும். அவ்வியக்குவோன் அவ்வியந்திரத்தின் வேருதல் தெளிவு. அதுபோலவே கருவிகளின் தொகுதியாகிய உடம்பு என்னும் இயந்திரமும் தானே இயங்குவதாயின். அவ்வியக்கம் ஒழுங்குடையதாய் இராது. ஆனல், உடம்பின் இயக்கம் ஒழுங்குடையதாய்க் காணப்படுகின்றது. ஆகவே, உயிர் அதனை இயக்குவோனுய் இருந்து அதனைக் குறிப்பிட்ட வகையில் ஒழுங்காய்

இயக்கி வருகின்றது என்பது புலனாகும். ஆகவே, உயிர் கருவித்தொகுதிக்கு வேருய் இருத்தல் அறிக. இன்னும் இதனை கீழ்க்காணுமாறு விளக்கலாம்.

ஓடும் இயந்திரத்தில் ஓடும் கருவி உள்ளது; ஆயினும், அது தானே ஓடாது; ஓட்டினால்தான் ஓடும். ஓட்டத்தைத் தடுக்கும் கருவி உள்ளது; ஆயினும், அதுதானே ஓட்டத்தைத் தடுக்காது; தடுக்கச் செய்தால்தான் தடுக்கும். இப்படியே வலம் இடம் திருப்பும் கருவி, ஒலிக்கும் கருவி அனைத்தும் அது அதுவே அந்த அந்த செயலைச் செய்யாது; வேறு ஒருவன் அதனைச் செய்விக்கவே செய்யும். அதுபோலவே, உடம்பில் பார்க்கும் கருவி, பேசும் கருவி, நினைக்கும் கருவி முதலிய அனைத்தும் உள்ளன; ஆயினும், அவைகள் தாமே தம் செயலைச் செய்யமாட்டா; உயிர் அவற்றோடு கூடிநின்று செய்விக்கவே அத்தொழிலைச் செய்யும்; ஆதலின், தனித்தனிக் கருவிகளுள் ஒன்றை உயிர் என்று கூறுதலோ, அனைத்தும் சேர்ந்த தொகுதியை உயிரென்று கூறுதலோ சிறிதும் பொருந்தாதென்று உணர்க.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I had the opportunity of worshiping Sri Vaithiayanathaswamy this morning. The temple executive officer the Supt., and other officers and the Athinam's representative here, have made all facilities for our worship. We feel much benefited by the visit.

Thanks to all concerned.

5—4—66. (Sd.) K. Raja Ram, M. L. C.,

சிங்கம்

சிவநெறிச்செல்வர்

திரு. K. M. வேங்கடராமையா M. A.,

(மலர் 25, இதழ் 4 பக்கம் 138இன் தொடர்ச்சி)

பரசமய கோளரி :

வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பரசமயத் தருக்கு ஒழியவும், தொண்டர் மனம் களி சிறக்கவும், தூயதிரு நீற்றுநெறி ஓங்கவும், அமண் முதலாம் பரசமயப் பவம் பெருக்கும் புரைநெறிகள் பாழ்படவும், தாவில் சராசரங்களெலாம் சிவம் பெருக்கவும், பரசமயம் நிராகரித்து நீறு ஆக்கவும் திருவவதாரம் செய்தவர் ஞானசம்பந்தப்பிள்ளையார். ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோட்கிணங்கி மதுரையை அடைந்தார். அவர் செல்லும்பொழுது திருநீற்றுத் தொண்டர் குழாம் புண்ணியத்தின் படையெழுச்சிபோல் உடன் வந்தார்கள் ; சின்னங்கள் ஊதப்பெற்றன ; அச்சின்னமெல்லாம் '**பரசமய கோளரிவந்நான்**' என்று ஊதின.

ஞானசம்பந்தர் மதுரையில் அமணை அழித்துக் கூன்பாண்டியனை நீறுபுனையச்செய்து பாண்டிநாட்டுத் தலங்களையெல்லாம் தரிசித்துச் சோழநாட்டுக்குத் திரும்புங்கால் திருநள்ளாற்றை அடைந்து இறைவனை வணங்கித் திருத்தெளிச்சேரியினைச் சேர்ந்து, சிவபெருமானைப் பரவிச் செல்லலுற்றார். போதிமங்கை என்ற இடத்திற்குச் செல்லும்பொழுது அங்குப் பௌத்தர்கள் வசித்து வந்தமையின், சைவரெல்லாம் பல்லியங்களாலும், '**பரசமய கோளரி வந்தான்**' என முழங்கிச் சென்றனர்.

இவ்விரு வரலாற்றுப் பகுதியாலும் ஞானசம்பத்தர் 'பரசமய கோளரி' எனப்பெற்றாரென்று அறியலாம். "பரசமய கோளரி மடம்" என்று ஒரு மடம் ஆச்சாள்புரத்தில் இருந்ததென்று விக்கிரமசோழனுடைய 3-ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தினின்றறியப்பெறும் (534 of 1918).

பரசமய கோளரி மாமுனி :

திருப்பாதிரிப் புலியூர்ப் பாடலீசுவரர் கோயில் மேற்குத் திருமதிலில் காணப்படும் சாசனங்களுள் மூன்று பாடல்கள் மிகச் சிதைந்து காணப்படுகின்றன. அவற்றுள் 'வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனி' என்ற கல்விசான்ற முனிபுங்கவர் ஒருவர் குறிக்கப்படுகிறார். அவர் அஷ்டா தசபுராணம், கன்னிவன புராணம், பூம்புலியூர் நாடகம் முதலாகிய நூல்களை இயற்றியவர் என்று அப்பாடல்களிலிருந்து தெரியவருகின்றது. பரசமய கோளரி என்றபெயர் இவர் சமயவாதம் புரிந்து வெற்றி பெற்றமையால் அடைந்த பெயராகக் கொள்ளலாம்; அல்லது திருஞானசம்பந்தர் பரசமய கோளரி என்று கூறப் பெறுதலின் அப்பெயரை இவர் பூண்டனராதல் கூடும் என்றும் கொள்ளலாம் இப்பாடற் சாசனங்கள் முதற் குலோத்துங்கனது 41, 49 ஆகிய ஆட்சி ஆண்டுகளுக்கு உரியவை (128-129 of 1902). எனவே இம்முனிவர் முதற் குலோத்துங்க சோழனுடைய ஆட்சியின் இறுதிப் பகுதியில் அதாவது கி. பி. 1111-1119க்குரிய காலப்பகுதியில் வாழ்ந்தவராவர் என்பது உறுதி.

அரிமா நோக்கு

இலக்கணங்களில் சூத்திரங்கள் அமைந்த நிலையைச் சூத்திர நிலை என்னலாம். இச் சூத்திர நிலை நான்கு வகைப்படும். ஆற்றொழுக்கு, அரிமாநோக்கு, தவளைப்பாய்த்து, பருந்தின் வீழ்வு என்பன அவை. சிங்கத்தின் பார்வை முன்னும் பின்னும் காணும் இயல்பினது. அது போன்று சூத்திரங்களும் தமக்கு முன்னும் பின்னும் இருக்கும் சூத்திரங்களோடு இயைபுபடப் பொருந்திச் செல்வதே சிங்கநோக்கு என்னும் சூத்திர நிலையாகும்.

சிங்க மன்னர்கள்

பல்லவ மன்னர்களுள் பலர் சிங்கப்பெயர் பூண்டவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள்.

இடைக்காலப் பல்லவருள் கி. பி. 436 முதல் 460 வரை ஆட்சி செய்தவனும், அவனது தம்பி மகனும், இவன் பெயரனும் (ஆகிய மூவரும்) சிம்மவர்மன் என்ற பெயருடையவராய் இருந்தார்கள்.

மூன்றாவது சிம்மவர்மன் மகனும், கி. பி. 575இல் பல்லவ அரசனானவனும், பல்லவ நாட்டைக் காவிரிக்கரை வரையிலும் விரிவுபடுத்தியவனும், 'பக்தி ஆராதித விஷ்ணு' என உதயேந்திரப் பட்டயங்களில் புகழப்பட்டவனும் ஆகிய சிம்மவிஷ்ணு

என்ற பல்லவ அரசன் சிங்கப்பெயர் பூண்ட பல்லவ அரசர்களுள் ஒருவன்.

மேற்கூறிய சிம்ம விஷ்ணுவின் பெயரன் நரசிம்மவர்மன் எனப்படுவான். இவன் கி. பி. 630 முதல் 660 வரை அரசனுகத் திகழ்ந்தவன். இவன் காலத்தில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், வாதாபி வரையிலும் சென்று பல்லவனுக்கு வெற்றிப்புகழ் ஈட்டித்தந்த பரஞ்சோதியார் எனப் பெயரிய சிறுத்தொண்டரும், பிறநாயன்மார்கள் பலரும் வாழ்ந்தவர்களாவர். இவன் மகாபலிபுரத்திலும் பிற இடங்களிலும் குகைக் கோயில்களைக் குடைந்திருக்கிருன். இவனே மகாபலிபுரத்தில் பஞ்சபாண்டவர் தேர்கள் எனப்படும் ஒற்றைக்கல் கோயில்களையும் வெட்டுவித்தவனுவன்.

இவனுக்குப் பின்னர் வந்த அரசருள் ஒருவன் இராசசிம்மன் எனப்பெறுவான். இவன் இரண்டாம் நரசிங்கவர்மன் என்றும் கூறப்பெறுவான். இவனே காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயில் கட்டுவித்த கொற்றவனுவான். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில் 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்' என்று பாடப்பெற்ற கழற்சிங்க நாயனுரை இந்த இராசசிம்மனுகவே ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுவர்.

மூன்றும் நந்திவர்வன் பெயரில் பாடப்பட்டது நந்திக்கலம்பகம் என்ற பிரபந்தமாகும். அந்நூலுள் இந்நந்திவர்மன் 'பல்லவச்கோளரி' (செய்யுள் 59) என்று கூறப்பட்டுள்ளான். யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் மேற்கோள் பாடலொன்றில் இந் நந்திவர்மனே சிங்கப் பெயரால் குறிக்கப் பெறுகிருன். அப்பாடல் வருமாறு :-

"நிலமகள் கேள்வனும் நேர்கழலி னுனும்
நலமிகு கச்சியார் கோவென்பவே
நலமிகு கச்சியார் கோவாயி னுனும்
சிலேமிகு தோள்சிங்கன் அவன்என்பவே
செருவிடை யானை அவனென்பவே."

சிங்கத்தூண்

நரசிம்மவர்மன் தன்சிங்கப்பெயர் நிலேபெறுமாறு தானமைத்த கோயில்களில் சிங்கத் தூண்களை வெட்டுவித்திருக்கிருன். முன்னங்கால்களை ஊன்றி வாய்திறந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கங்களின் தலேமேல் இவனுடைய தூண்கள் இருக்கும்.

இராசசிம்மனும் சிங்கத் தூண்களை வெட்டுவித்தான். இவனுடைய தூண்களின் கீழ் அமைந்த சிங்க உருவங்கள், தம்முடைய பின்னங்கால்களின் மேல் நிற்பதாக அமைந்துள்ளன.

சிங்கச் சுவணம்

இது ஒருவகை உயர்ந்த பொன்; அயிராபதம் என்னும் மலையில் பிறப்பது. இச்செய்தி பெருங்கதை - வத்தவகாண்டம் - பண்ணிகாரம் விட்டது என்ற பகுதியில் சொல்லப்பட்டுள்ளது அவ்வடிகள் பின்வருமாறு :-

" அருமலை அடுக்கத்(து) அயிரா பதமெனும்
பெருமலைப் பிறந்து பெறுதற் கரிய
தீதுதீர் சிறப்பில் சிங்கச் சுவணம் என்(று)
ஓசை போகிய ஒண்பொற் கலங்களும்."

அரிமுக வம்பி!

முன்னாளிலும் நீர்நிலைகளைக் கடக்கப் படகுகளைப் பயன் படுத்தினர். அப்படகுகள் யானைமுகம் உடையனவாயும், குதிரை முகம் உடையனவாயும், சிங்கமுகம் உடையனவாயும் இருந்தன. சிங்கமுகப் படகு அரிமுகவம்பி எனப்படும். சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் - புறஞ்சேரியிறுத்தகாதை - 176-177 இல் இவ்வம்பிகளை இளங்கோவடிகள் உரைத்துள்ளார்.

முடிப்புரை :

இதுகாறுங் கூறியவாற்றான் சிங்கமென உருவகிக்கப்பெற்ற பலரைப் பற்றியும், சிங்கத்தொடர்புடைய பிறவும் அறியலாயின.

மன்பதைகள் சாவாமூவாச் சிங்கமாகிய சிவபெருமானின் அருள்வழி நின்று தெருள்வாராகுக!

தவராஜ சிங்கம் எனப் புகழப்பெற்ற சித்தர்போன்று சித்தாந்த சமரச நன்னிலை பெறுவாராகுக!

செந்தமிழ் புலவர் சிங்கமாகிய குமரகுருபரசுவாமிகளின் நூல்களைக் கற்று நீதிநெறியில் செல்வாராகுக!

தமிழ்ச் சிங்கமாகிய மெய்கண்ட தேவரின் சாத்திரங்களைக் கற்றுச் சைவசித்தாந்திகளாக மிளிர்வாராகுக!

தமிழ்ப்புலவர் எல்லோர்க்கும் சிங்கமாகிய சொக்கலிங்கப் பெருமானை வணங்கிக் கற்றாருட் கற்றார் எனப்படுவாராகுக!

சிங்கமன்னர்கள்போல வீரம் செறிந்தாராகிச் சிவசூடாமணிகளாக விளங்குவாராகுக!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு

சென்னை, இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையினர்

சுழற்கோப்பை வழங்கும் விழா

வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளின் வரவேற்புரைச் சுருக்கம் :-

இன்றையதினம் இந்த ஊருக்கே சிறந்த நாள் வரலாற்றிலே சிறப்பாகப் போற்றவேண்டிய நாள். ஏன் எனில் அமிர்தகடேசருக்குக் கொடுக்கும் பரிசிலை இங்குப் பார்க்கிறோம். இறைவனுக்கு யாரும் பரிசு கொடுக்கமுடியாது. இவ்வூரிலுள்ள மக்கள் இக்கோயிலை நன்றாகப் பராமரித்துவருகிறார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆட்சியில் திருக்கோயிலாட்சி நன்றாக நடைபெறுவதற்கு இவ்வூர்வாசிகள் உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். இக்கோயில் நல்லமுறையில் இயங்கிவருகிறதென்றால் இக்கோயில் தொண்டர்களும் செம்மையாக இருப்பதே இதற்குக் காரணம். ஒரு தலைவனுக்குப் புகழ் வருகிறதென்றால் அதற்குக் காரணம் அவ்வூரிலுள்ள மக்களும் தொண்டர்களுமே என்று சொல்லவேண்டும். நமது மகாசந்நிதானத்திற்கும் இவ்வாட்சிக்கும் சிறப்புக்கிடைக்கிறதென்றால் இவ்வாலயத்தில் பணியாற்றி வருகின்ற தொண்டர்கள் நன்றாகத் தொண்டாற்றி வருகின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அப்படி இல்லையென்றால் இக்கோயில் சரியாக இயங்கமுடியாது. ஆகவே இப்பாராட்டெல்லாம் மகாசந்நிதானத்திற்கு மட்டுமல்லாமல் கோயில் சரியாக இயங்க உறுதுணையாக இருந்த உள்ளூர்வாசிகட்கும் பணியாளர்கட்கும் சேர்ந்ததென்று கூறலாம். தஞ்சை திருச்சி மாவட்டங்களில் தற்போது உள்ள கோயில்களில் பாடல்பெற்ற தலமாக 190 விளங்குகிறது. இதில் மார்க்கண்டருக்காகக் காலனைக் காய்ந்த தலம் திருக்கடவூர். ஆலயத் தூய்மையில் ஆதீனக்கோயில் சிறந்ததென்று போற்றப்படுகிறது. மந்திரிகளும் நீதிபதிகளும் பாராட்டிவருகின்றனர். நான் நினைத்ததெல்லாம் வைத்தீஸ்வரன்கோயிலுக்குத்தான் பரிசுகிடைக்கும் என்று, ஆனால் அமிர்தகடேசருக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. காரணம்

மார்க்கண்டேயர்தான். வரலாறு அறிவார்க்குத் தெரியும். பெருமான் அமிர்தகடேசர். அமிர்தம் என்பது புனிதமானது. சாவா மூவாப் பெருவாழ்வு அளிக்கவல்லது; இனிமையானது என்பதெல்லாம் உங்கட்குத் தெரியும்.

இனிமையான தூய்மையான பெயர்பெற்ற அமிர்தகடேசர் என்பதால் இப்பரிசளித்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும் மார்க்கண்டேயருக்குப் பெருமான் என்றும் பதினாறாக இருக்க வென்று வரமளித்தார். அவர் தன்னுடைய நன்றியைத் தெரிவிக்கப் பரிசுவாங்கித் தந்துவிட்டார். மார்க்கண்டேயருக்காகக் கடவூர்ப் பெருமான் காலனைக் காய்ந்து அவருடைய உயிருக்கு Exemption வாங்கித்தந்தார். அவ்வாறு செய்த பெருமானுக்கு நன்றிதெரிவிக்கும் வகையில் இச்செயல் செய்வது சிரமமாகவா இருக்கப்போகிறது.

இப்பரிசு திருச்சி மாவட்டம் நம்முடைய மாவட்டம் இரண்டிலும் உள்ள கோயில்கள் எல்லாவற்றிற்குமா கிடைத்துள்ளது? மார்க்கண்டேயர் ஆலயத்திற்கு மட்டும்தான் கிடைத்துள்ளது. இன்றைய தினம் கோயில் தரிசனம் செய்யும்போது கோடிரூபாய் கொடுத்தால்கூட இத்தரிசனம் கிடைக்காதென்று உறுதியாக, துணை ஆணையர் அவர்களே சொல்லியுள்ளார்கள். சென்னை மாநிலத்தில் முதல்முதலாகப் பரிசு கொடுக்கிறார்கள். முதல் முதலாகக் கொடுக்கும் பரிசு தூய்மையான கோயிலுக்குக் கொடுக்கவேண்டுமென்பது எண்ணம். ஆதலால் பெருந்தலைவர்களாக, அமைச்சர்களாக இருப்பவர்கள் கொடுக்கவேண்டுமென்று இருந்தது; ஆனால் பெருமான் பார்த்து நம் பக்தன் தான் வரவேண்டுமென்று எண்ணி மார்க்கண்டராஜரை அனுப்பியுள்ளார்.

சுழற்கோப்பை என்பது சுழன்றுகொண்டே இருக்குமா என்று என்னைக் கேட்டார்கள். சுழற்கோப்பை என்பது ஒரு இடத்திலே இருப்பதல்ல. அடுத்த ஆண்டு இதைவிடப் புனிதமான - தூய்மையான கோயில் இருக்குமானால் அதற்குக் கொடுத்துவிடுவார்கள்.

இச்செயலை ஏற்றுக்கொண்டது; தர்மகர்த்தாக்கள் நிர்வாகிகள் இவர்களை ஊக்கப்படுத்துவதற்கே என்று சொல்லலாம். பரிசளித்தலுக்கு ஏற்பாடுசெய்த அறநிலைய இலாகாவுக்கு நன்றி சொல்லி வரவேற்கிறேன்.

அறநிலைய இலாகாவில் காலத்திற்கேற்ப நல்லறங்காவலர் கனம் திரு. M. பக்தவத்சலம், அதேபோல் திரு. M. S. சாரங்க பாணி முதலியார், துணையாணையர் மார்க்கண்டவேல்ராஜன், உதவித்துணையாணையர் அர்ச்சுனன் முதலியவர்கள் உள்ளனர். திருப்பணிகள், கும்பாபிடேகங்கள் போன்ற நற்பணியாகிய நல்ல செயலில் ஊக்கம் வளரவேண்டும் என்று அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு சுழற்கோப்பை வழங்குகிறது. சுழற் கோப்பை வழங்கவந்தவர்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மார்க்கண்டவேல்ராஜன். நம் கோயிற்கேற்ற தொண்டர் என்ப தைப் பெயர்ப்பொருத்தமே நமக்குத் தெரிவிக்கிறது. அவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சார்பிலும் பொதுமக்கள் சார்பிலும் நன்றி சொல்லி வரவேற்கிறேன். உறுதுணையாகி நின்ற. அருச்சுனன் அவர்களையும் நன்றிசொல்லி வரவேற் கிறேன். வணக்கம்!

துணையாணையர் திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் ஆற்றிய உரைச்சுருக்கம் :-

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கும் ஸ்ரீமத் தம்பிரான் சுவாமி களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்களுக்கும், குழந்தைகட்கும் என் வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. இது என் கோயிலென்று நான் Promise (உறுதி) செய்வேன். இந்த மாவட்டத்தில் இக் கோயில் போல் பார்த்ததேயில்லை. திருப்பதி முதல் கன்னியா குமரி வரை அபிராமியம்மை சம்ஹாரமூர்த்திபோன்ற உருவம் பார்த்ததேயில்லை. யோசனை செய்து பார்த்ததில் பரிசு கொடுக்கத் தகுதிவாய்ந்த கோயில் இதுதான் என்ற எண்ணம் ஏற்பட்ட காரணம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்தான். நான் பத்தாண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துடன் வந்து இக்கோயில் முழுவதும் சுற்றிப்பார்த்திருக்கிறேன். நான் அப்போது மதுரையில் டிப்டி கலெக்டராக இருந்தேன். நான் மதுரையில் கோயிலுக்குச் சென்று குளத்தின் ஒருபக்கம் உட் கார்ந்திருப்பேன். ஓதுவார் பாடும்போது ரசித்துக்கொண்டிருப் பேன். இப்போது அவ்வாறு இருப்பதென்பது முடியாது. இப்போது டிப்டி கமிஷனர்; கோயிலுக்குப்போனால் நிம்மதியாக உட்கார்ந்து கேட்க முடியாது. இது நமக்கு இடைஞ்சல். சிவாயநம, ஓம்சக்தி என்பது என்னுடைய மானசீகத்தில் அமைந் துள்ளது. ஓட்டுப்போட்டு பார்த்தாலும் இக்கோயிலுக்குத்தான் பரிசு கிடைக்கும். முன்பு ஒருதரம் 'எக்ஸிகூட்டிவ் ஆபீசர்களை

இக்கோயிலுக்கு வரவழைத்துக் காட்டினேன். ஆனால் அப்போது பரிசு கொடுக்கும் எந்த எண்ணமுமில்லை. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் ஆதீனக் கோயில்களை நல்ல முறையில் வைத்துள்ளார்கள். இன்னொரு கோயில் தூய்மையாக இருந்தால் அதற்கும் பரிசு கொடுக்கப்படும்.

இங்குள்ள அபிராமி அம்மை நல்ல அமைப்பாக உள்ளது. அபிராமிப்பட்டரை எல்லோரும் குடியர் என்று சொல்லிவிட்டனர். அரசனும் இதை நம்பி இன்று என்ன திதி என்று கேட்க அமாவாசையை பௌர்ணமி என்று சொல்லிவிடுகிறார். அரசன் கோபம் அடைய அபிராமிப்பட்டர் அம்பிகையை வேண்டிக் கொண்டு அபிராமி அந்தாதி பாடுகிறார். அபிராமி தன்னுடைய குழையைக் கழற்றி வானத்தில் வீசி அமாவாசையைப் பௌர்ணமி ஆக்கினாள். அபிராமி தியானத்தில் ஆழ்ந்திருந்த பட்டருக்கு அமாவாசை இருளா தோன்றும்? ஒளிமயமாகவிருந்தது. இது பக்தியின் பரவசத்தாலே நிகழ்ந்தது எனலாம். அறுபது ஆனவர்கள் கடவூருக்கு வந்து தங்களுக்கு வயது நிரம்ப வேண்டுமென்று வந்து வேண்டிக்கொள்கிறார்கள் இறைவனிடத்தில் சக்தியில்லாமலா அவர்கள் இங்குவருகிறார்கள்.

தூய்மையாக இருந்தால் கோயிலுக்கு மக்கள் நிறைய வருவார்கள். வழிபாட்டில் ஈடுபட்டு பக்தி பரவசமாகின்றனர். இன்று ஆலயத்தில் நல்ல அலங்காரம். அடுத்த மாதம் கமிஷணரை இங்கு அழைத்து வரலாம் என்று எண்ணுகிறேன். ஆண்டவனுக்குத் திருப்பணி செய்வதில் வருமானத்தைச் செலவிட வேண்டும். மகாசந்நிதானம் ஆட்சியில் எல்லாக் கோயிலும் நன்றாக இருக்கிறது. கோயில்களைப் பார்ப்பதற்கு அவர்கள் திடீரென்று புறப்படுவார்கள். அங்குள்ள தொண்டர்கள் பய பக்தியுடன் ஓடிவந்து சொன்னதைச் செய்வார்கள். குற்றம் எங்கிருந்தாலும் அவைகளைக் கவனித்துப் பார்ப்பதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தவறுவதே இல்லை. இவ்வாறு கோயில்களைத் தானேபார்ப்பதால் கோயில்கள் தூய்மையாக விளங்குகிறது.

கோயில்களைப் பார்த்தால் விளக்குப்போடப் பயன்படும் எண்ணெய் அங்கங்கே வழியும். இக்கோயிலில் எங்கும் ஒரு சொட்டு எண்ணெய் சிந்தியிருப்பதைப் பார்க்கவேமுடியாது. எல்லாக்கோயில்களுக்கும் ஷீட் சுத்தம் செய்ய மிஷின் வாங்கித் தருகிறேன். ஆனால் அக்கோயிலிலுள்ளார் அதைக் கவனிப்பதென்பதே இல்லை. இங்கு மடைப்பள்ளியும் சுத்தமாக இருப்பதைப் பார்க்கிறேன். சில கோயில்களில் பிரசாதம் வாங்கினால்

கல்தான் தட்டுப்படும். இங்குப் பிரசாதம் நல்ல முறையில் இருக்கிறது. பிரசாதம் சுத்தமாக இருந்தால்தான் மக்கள் மகிழ்வுடன் வந்து, வழிபட்டு அவற்றை வாங்கி உண்பர்,

இக் கோயிலைப்போலவே எல்லாக் கோயிலும் ஏன் இருக்கக் கூடாது. இரண்டு மூன்று பரிசு கொடுக்கவேண்டும். ஆனல் முதல் பரிசு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் நிர்வாகத்தில் உள்ள கோயில்களுக்குத்தான் கிடைக்கும். அதனல் மற்றைய பரிசை யாவது இதர கோயில்கள் பெறட்டும் என்பதே என் எண்ணம். எனக்கு எல்லாக்கோயிலும் நல்லதாக இருக்கவேண்டும்; ஆண்டவனைத் தரிசிக்க மக்கள் திரண்டுவரவேண்டும்; சுவாமிபுறப்பாடு செய்வதைக் காலத்தில் செய்யவேண்டும். பகல் பன்னிரண்டு மணிக்குப் புறப்பாடாகி வீதிவலம் வந்தால் மக்கள் வெறுப்படைகிருர்கள், ஆதீன நிர்வாகத்தில் குறைசொல்ல முடியாது. வெள்ளைக்காரனிடம் டைகட்டக் கற்றுக்கொண்டோம். ஆனல் காலந்தவருமையைக் கற்றுக்கொள்ளவில்லை. ஆதீனக் கோயில்களின் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் முதல் தேதியே வந்துவிடுகிறது. இதுபோல் எல்லாக் கோயில்களும் ஏன் இருக்கக்கூடாது.

தூய்மையாக இருந்தால்தான் மக்கள் வழிபட வருவர். அப்போதுதான் வழிபாட்டில் மனம் ஈடுபடும். அதில் மனம் ஈடுபட இப்போது இறைவனின் நாமபஜனை செய்வோம்.

எல்லோரும் இறைவன் நாமத்தை ஏன் சொல்லக்கூடாது. சிலருக்குச் சொல்லவே வாய் வருவதில்லை. பல ஜென்மம் புண்ணியம் செய்தால்தான் ஆண்டவன் பேர் சொல்ல வாய் வரும். பாவம் செய்தவனுக்கு வாய்வருவதில்லை.

சிலருக்கு ஆண்டவன் பேர் சொல்ல வாய் கசக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு அன்ருடம் இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாளைப் போறறவேண்டும். மூச்சு உள்ளே போகும்போது முருகா என்றும், வெளியே விடும்போது முருகா என்றும் ஆனந்தமாகத் தியானம் செய்வது நல்லது. கிருஸ்தவர் கோயில்களுக்குச் சென்ருல் அவர்கள் தூய்மையாக இருப்பதையும் அவர்கள் வழிபாடு செய்வதையும் பார்க்க எவ்வளவு நன்ருக இருக்குகிறது? பார்க்கவில்லையா?

எல்லோரும் சப்தம் செய்யாமல் கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய்யுங்கள். குழந்தைகள் அம்மா என்று அழைத்ததும் தாய்மார்கள் எப்படி வருகிருர்களோ? அதேபோல்

அம்பிகையும் அழைத்தால் வருவாள். எனவே கண்ணை மூடிக் கொண்டு பத்துநிமிடம் தியானம் செய்யுங்கள் பார்க்கலாம். உங்களைப் பாடச்சொன்னால் அதனால் எனக்கும் புண்ணியம் உண்டு. (பின்னர், ஒருநிமிடம் தியானம்செய்யப்படுகிறது) எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? கயிலாசம் போவதுபோலவே இருக் கிறதல்லவா? இந்தக் கோயிலில் உள்ள மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறு வயது போல இந்தச் சுழற்கோப்பையும் இங்கேதான். வேறு கோயில்களுக்கு வேறு சுழற்கோப்பைதான். இதனால் மகாசந்நிதானத்திற்குப் பேரும் புகழும் வளர வேண்டும். அவர்கள் என்றும் இவ்வாறே சிறப்பாக நிலைத்த பணிசெய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொண்டு அமைகிறேன்.

நாகைப்பட்டினம் உதவித் துணைஆணையர் திரு. அர்ச்சுனன் அவர்கள் நன்றியுரைச் சுருக்கம் :-

தேவாலயங்களில் இதுபோன்று நடக்கும் நிர்வாக விழாக் களுக்கு ஆலய நிர்வாகத்தினர்தான் நன்றிசொல்வது வழக்கம். துணையாணையர் அவர்கள் நன்றி நவிலவேண்டுமென்று சொன் னதைப்பற்றி சிறிது சிந்திக்கலானேன். தஞ்சை திருச்சி மாவட் டத்தில் துணையாணையரவர்கட்கு உட்பட்ட தூய்மையான ஒரு கோயிலுக்குப் பரிசளிக்கப்படும் விழா இது. திருச்சி தஞ்சை மாவட்டங்களில் 3000 கோயில்கள் இருக்கின்றன. சற்றுமுன்பாக ஸ்ரீமத். தம்பிரான் சுவாமிகள் பாடல்பெற்ற தலமாக 190 உள்ள தென்று சொன்னார்கள். துணையாணையாளர் அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட ஆலயம் இருநூற்றைம்பது. இந்தக்கோயில்களில் எது புனிதமானது என்று தெரிந்துகொள்வதற்குச் சிரமம் தோன்ற வில்லை. வெள்ளிடைமலைபோல இரண்டுகோயில்கள் விளங்குகிற தென்றால் ஒன்று திருக்கடவூர், மற்றது வைத்தீஸ்வரன்கோயில் என்று சொல்லவேண்டும். அதில் இக்கோயிலைச் சிறப்பாகவும் தூய்மையாகவும், பரிசளிப்பதற்கு ஏற்ப வைத்திருந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை வணங்குவதுடன் எல்லோருக்கும் நன்றி சொல்கிறேன்.

கட்டளைவிசாரணை, வித்துவான் ஸ்ரீமத்சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் திருக்கோயில் சார்பில் நன்றியுரைச் சுருக்கம் :-

இவ்வூரில் இவ்விழா நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்த எல்லோருக்கும் நன்றி செலுத்தக் கடமைபட்டுள்ளோம்.

அன்று முதல் இன்றுவரை இவ்வூர் மக்கள் பக்தியில் ஊறி யிருக்கிறார்கள். எங்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் நல்ல முறை யில் ஆணை செலுத்திவருகிறார்கள். அதன்வழியே எல்லோரும் நடந்ததால்தான் இச்சுழற்கோப்பையானது கிடைத்தது. மூன்று ஆண்டு பரிசில் நிலைபெற்றால் (Gold cup) தங்கக் கோப்பை என்று ஏற்பாடு செய்யவேண்டும். பரிசிலுக்கும் பணியாளரும் காரணமாக இருக்கவேண்டும். எனக்கு இது நல்ல மனநிறை வைத் தருகிறது. கோயில்களில் ஆகம விதிப்படி வழிபாடு நடை பெறுவதால் தெய்வவொளி வீசுகிறது. இவ்வாறு தெய்வ ஒளி வீசச்செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகட்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இலாகா அதிகாரி கட்கும், இங்குக் குழுமியுள்ள மக்கட்கும் நன்றி செலுத்திக் கொண்டு எனது நன்றியுரையை முடித்துக் கொள்கிறேன்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

I consider it my good fortune to have visited this temple to-day with my wife. We are grateful to the management for the facilities afforded to us. Everything in and around here is divine. Clearliness is next to Godliness. Both are so excellently combined here.

Our hearts are too full for words.

(Sd.) C. G. Ranga Bashyam,
Collector, Thanjavur.

18-3-66.

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

கலைச்செல்வங்களும் ஹோயிஸாலா சிற்பகலைகள் நிறைந்த இத்திருக்கோயிலில் தரிசனம் செய்யும்பேறு இன்று கிடைத்தது. சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு பழங்கால (1200 கி. பி.)யி லுள்ள கலைகளைப் பாதுகாத்தும் தரிசனார்த்திகளுக்கு விளக்கம் கூறுவதையும், பார்க்கும்போது கயிலைக் குருமணியவர்களின் ஆளுகையின் பெருமை நன்கு விளங்குகிறது. சமய உலகம் அவர்கட்கு நன்றி செலுத்துவது கடமை.

ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை,
இலஞ்சி.

19-3-66.

அமுதிற்குத் தமிழென்று பேர்

வித்துவான். திருமதி. ப நீலா

இன்பம் விரும்பும் இயல்பு எல்லோருக்கும் பொது. உலகின் துன்பப் பிடியில் உழலும் உயிர் வருக்கம் என்றே ஒருநாள் தாம் இன்பம் பெறலாம் என்ற எண்ணம் கொண்டு ஓயாது உழைக்கின்றது. உணவிற்காக முயலும் எறும்பு முதல் உணர்விற்காக முயலும் ஞானிவரை இதற்கு விலக்கல்ல. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கி வீடும் வேண்டா விறல் படைத்த ஞானிகள் வெகுசிலரே. மற்றவர்கள் அஞ்ஞானி களுக்கு இணையாகா அஞ்ஞானிகளே. இன்பம் என்பது அறிவிற்கும், மனத்திற்கும் விருந்தளிக்கும் பான்மையை இனிப் பார்க்கலாம்.

மனம் உணவினாலும், உடனுறைவினாலும் இன்பம் பெற, அறிவோ மொழித்திறத்தால், பண்பாட்டால் அமைதி பெறு கிறது. மனத்திற்கு நாவாலும், அறிவிற்குச் செவியாலும் இன்பம் கிடைக்கிறது. வாய் வழியாச் சென்ற உணவிற்கு வயிறு இடமாதல் போல, செவி வழியாகச் சென்ற உணர்விற்கு நெஞ்சு இடமாகிறது. நன்னூலில்,

> " செவி வாயாக நெஞ்சு களனாக
> கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்து "

என்பார் பவணந்தி முனிவர்.

அறிவு கருவியாக அடையும் இன்பம் நிலைத்திருக்க மனம் வழியாக வரும் மகிழ்ச்சியோ கணநேரத்திற்குள் அழிந்து விடுகிறது.

> " கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள " — குறள்.

என்று மனம் மயங்குவதே சிற்றின்பம்.

துகளற்ற காட்சி :

" குக்கூ என்றது கோழி அதனெதிர்
துட்கென் றன்றென் தூய நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே "

— குறுந்தொகை.

என்று அறிவறியா உயிர் சிற்றின்பத்தைப் பெரிதும் மதிக்க, அறிவறிந்த மனமோ.

" துகளறு தொல்கேள்வித் தொன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையர் தம்முட்குழீஇ - நகலின்
இனிதாயிற் காண்பாம் அகல் வானத்து
உம்பர் உறைவார் பதி "

என்று எண்ணும், இச்சுவைதவிர (புலவரொடு கூட்டுண்ணும் புகழ்சால் சிறப்பு) யாம் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேம் என்று செம்மாந்து கூறுவர் துகளறு காட்சித் தொன்மையாளர்.

பிறப்பிலே பேதமில்லை :

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று உணர்ந்தும்கூட, " சாதி இரண்டொழிய வேறில்லை மேதினியில் இட்டார் பெரியோர் - இடாதார் இழிகுலத்தோர் " என்று படித்திருந்தும் படிய மறுக்கும் மனத்தைப் பாண்டியனின் கூற்று நன்கு சிந்திக்க வைக்கிறது.

கல்வியைப்பெற எதைவேண்டுமானாலும் செய்யலாம்.

" உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே "

என்ற பாண்டியர் பெருமானின் சொல் போன்றே வள்ளுவப் பெருந்தகையாரும்,

"உடையார் முன்,இல்லார் போல் ஒக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்று சுட்டுவார்.

"பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

என்பது ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனின் பாடல்.

பரிமேலழகரின் நுண்ணிய உரை :

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு"

என்ற குறளுரையில் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களை எல்லாம் நன்கு கற்றுணர்ந்த பெரியோரான பரிமேலழகர் மேலே கண்ட பாண்டியனின் கருத்தை ஒட்டியே 'உடலோடு ஒழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வி உயர்ச்சி சிறப்புடைத்து என்றும், இதனால் அவரது சாதி உயர்ச்சியால் பயனின்மை கூறப்பட்டது-என்றும் எழுதுகிறார். உயிரோடு செல்லுங் கல்வி என்பதில் வள்ளுவருக்கும் உடன்பாடு உண்டு என்பது,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

என்ற குறள் மூலம் நாம் அறியலாம். வினைகள் போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகுமாகலின் எழுமையும் தொடரும் என்று ஆண்டும் எழுதுவார் பரிமேலழகர்.

அழியாச்செல்வம் :

கற்றிந்தார் கேடில் விழுச்செல்வம் கல்வி என்பதை நன்குணர்வர் பிற செல்வமாயின் ஈட்டல், காத்தல், இழத்தல் என்றிவற்ருல் துன்புறுதலும், பலரையும் பகையாக்கலும் உடைத்தெனை எண்ணி அவற்றைக் காமுருர். உணவு ஆசைக்குரிய பொருளாஞல் தேடற்றுன்பமே யன்றி நோயும், காமமும்மிகும். அதனுல் இவை எல்லாவற்றையும்விட சுவை மிகுதியும், பிற்பயத்தலுமுடைய அறிவுச் செல்வமே சிறந்தது. வயிற்றுணவின் சுவை ஆறு. (இனிப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு) செவி உணவாம் உணர்வின் சுவையோ ஒன்பது. (வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம்) ஆறு பெரிதா - ஒன்பது பெரிதா! என வினவின் அறிவறிந்த குழந்தை ஒன்பான் சுவையுடை அறிவுச்செல்வமே அழியாச்செல்வம் என்று அழகாகக் கூறுமே.

இனி செந்தமிழ் இனிமை பயக்கு மாற்றைச் சற்றே விரித்து நோக்குவோம்.

(விரியும்)

திரு. பி. நடராஜ தீக்ஷிதர், சிதம்பரம்.

இராகம்: கல்யாணி] *[தாளம்: ஆதி*

பல்லவி

எல்லாம் அவனுக்கு தெரியும் என்றே
சொன்னல் உனக்கென்ன புரியும் (எல்லாம்)

அனுபல்லவி

கல்லாதவர் கற்றதும் கற்றவர் கல்லாததும்
இல்லாதவர்க் கிருப்பதும் இருப்பவர்க் கில்லாததும்
(எல்லாம்)

சரணம்

வந்தவினையும் இனி வருகின்றவல்வினையும் மற்
றெந்தவினையும் எனை என்னசெய்யும்
அந்தமாதிஇல்லா அறனை மனதில் நினை
சுஹஜொளி தெரிந்திடும் அகிலமே வியந்திடும். (எல்லாம்)

செந்தமிழ்ச்செல்வர் வாழ்க !

தற்காலத் தமிழறிஞர்கள் வரிசையிலே முதலில் வைத்து எண்ணத்தக்க பெருமை படைத்த செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களைத் தமிழ் உலகம் நன்கறியும். எழுச்சிமிக்க அவரது கவியாற்றலை அவர்தம் இன்தமிழ்ப் பாடல்கள் எடுத்தியம்பும். கட்டுரைவரையாற்றலை அவர்தம் கவின் ஏடு 'கலைமகள்' விரித்துரைக்கும். கடல்மடை திறந்தாலொத்த அவரது கருத்துமிக்க பேச்சாற்றல் கற்றவர் உள்ளத்திலெல்லாம் எதிரொலி செய்யும். அவரது சைவ-சமயப்பணி சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழகத்தில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.

தமிழ் அறிஞர், டாக்டர். உ. வே. சா. அவர்களின் தலை மாணாக்கர் என்ற பெருமை நம் செந்தமிழ்ச்செல்வருக்கு உண்டு. எண்ணற்ற அவர்தம் எழுத்துப்படைப்புக்கள் காலத்தை வென்று நின்று நிலவும் என்பது திண்ணம். தமிழர் வாழ் பகுதியெலாம் கண்டு, அவர்தம் சமயக் கோட்பாடுகளை நுணுகி ஆய்ந்து வெளியிடுவதும், அவர்தம் நாகரிக வாழ்வைச் சான்றுகளுடன் நிறுவுவதும் செந்தமிழ்ச் செல்வரின் அரிய உழைப்பை உலகுக்கு விளக்கியுள்ளன.

அன்னாரின், சைவப்பணியோடு கூடிய தமிழ்த்தொண்டை ஊக்கும் வகையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டமருளிச் சிறப்பித்தார்கள். தருமையாதீனத்தோடு நெருங்கிய பிணைப்புடைய செந்தமிழ்ச்செல்வருக்கு 1966 ஏப்ரல் திங்கள் 9ஆம் நாள் அறுபதாண்டு நிறைவெய்தியது அச்சிறப்பு நிகழ்ச்சியாக மணிவிழாக்கொள்ளும் செந்தமிழ்ச்செல்வர் பல்லாண்டு வாழ்ந்து, தமிழும், சைவமும் செழிக்க பல நிலையான தொண்டியற்ற, எல்லாம்வல்ல செந்தமிழ்ச் சொக்கன் அருள் பாலிப்பானாக.

வாழ்க ! செந்தமிழ்ச்செல்வர் !

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீஸ்வரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

அதியமான் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியை உண்டால் ஆயிரம் ஆண்டுகள் நோயில்லாமல் வாழலாம் என்று அறிந்திருந்தும் தமிழ் மூதாட்டியார் ஒளவைப் பிராட்டிக்கு அளித்தார் என்ப அதனால் நெல்லிக்கனியைக் கற்ப முறைப்படி உண்டால் நீண்டகாலம் வாழ முடியும் என்பது இதனால் அறியப்படுகின்றது.

மா, பலா, வாழை முக்கனியென்று நாம் யாவரும் சாதாரணமாக அறிந்திருக்கின்றோம். ருசியாகவும் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் இருப்பதால் இதை முக்கனி என்று வழங்குகிறோம். ஆனால் இது உடலை வளர்க்காது. அதிகம் உண்டால் நோயை உண்டாக்கக் கூடியது.

உடலை வளர்க்கக்கூடிய முக்கனியாக நெல்லிக்கனி, தான்றிக்கனி, கடுக்காய்க்கனி ஆகிய மூன்றையும், வைத்திய சாத்திரத்தில் சிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவற்றைக் கற்ப முறைப்படி உண்பவர்க்குப் பல்லாண்டுகள் வாழ்வதற்கு வேண்டிய இளமையையும், உடல் வலிமையையும் கொடுக்க வல்லது. மேல் நாடுகளில் உணவுப் பொருள் ஆராய்ச்சி நடத்திய நிபுணர்கள் ஒரு நெல்லிக்கனியினுடைய சத்து இரு ஆப்பிள் கனிகளுக்கு உள்ள சத்துக்கு ஈடாக உள்ளது என்று அறிவித்துள்ளார்கள்.

நெல்லியில் கருநெல்லி, அரிநெல்லி, தோப்புநெல்லி என மூவகை உண்டு. இவற்றுள் கருநெல்லி கிடைப்பதரிது. சித்திரைமாத ஆரம்பத்தில் நமக்கு எளிதாகக் கிடைக்க கூடிய தோப்பு நெல்லிக்கனியை மரத்தின் அடியில் வைக்கோலைப் பரப்பி, மரத்தை லேசாக உலுக்கினால், பழுத்த பழங்கள் மட்டும் கீழே விழும். அவற்றைப் பொறுக்கி எடுத்து நிழலில் உலர்த்தி, நன்றாகப் பருத்த புரச அடிமரத்தை ஓர் புறத்தில் துளைத்து, அதனுள் நெல்லிக்கனிகளை அடைத்து, துவாரத்தை துளைத்து எடுத்த புரச மரத்தின் சக்கைகளால் மூடி, தர்ப்பைப் புல்லைக் கயிறாகத் திரித்து, தாமரைக்குளத்தின் சேற்றைக் கயிற்றின்மீது தடவி, மரம் வெளியே தெரியாதவாறு சுற்றி கவசம் செய்து நன்கு காயவைத்து, பூமியில் இரண்டடி ஆழம் குழி தோண்டிப்

புதைத்து, நாற்பத்தைந்து நாள் புதைத்த இடத்தின்மேல் வரகு வைக்கோலையும், ஆட்டு எருவையும் சேர்த்து தினம் ஒரு மணி நேரம் எரிக்கவேண்டும். நாற்பத்தி ஆறும் நாள் மரத்தைத் தோண்டி யெடுத்து, உள்ளிருக்கும் கனிகளை அப்புறப்படுத்தி, திரும்பவும் நிழலில் உலர்த்தி பெரிய பீங்கான் ஜாடியில் கனிகளைப் பரப்பி, சுத்தம் செய்த தேனை கனிகள் மறையும்வரை விட்டு 48 நாட்கள் பகலில் சூரிய வெப்பத்திலும் இரவில் வேடு கட்டிப் பனியிலும் வைத்து, எடுத்துக்கொள்ளவும். ஷை கனிகளை தினம் ஒன்றாக ஒரு வருடம் உண்டுவந்தால் எந்த வியாதியும் அணுகாது, நரை, திரை, மூப்பு அகலும், என்றும் இளமை யுடன் இருக்கலாம்.

100 வருடம் சென்ற வேப்பமரத்தின் வேர், பட்டை, இலை, காய், வித்து என்னும் இவற்றையும், நெல்லி மரத்தின் வேர், பட்டை, இலை, காய், வித்து இவற்றையும் தனித்தனியே இடித்து, சூர்ணம் செய்து, ஒன்று கலந்து, $\frac{1}{4}$ பலம் வீதம் சுத்த தண்ணீர், தேன் அல்லது நெய்யுடன் இரவில் சாப்பிட்டுவர, நல்ல பசியும், சுறுசுறுப்பும் உண்டாகும். மேலும் இச்சூரணத் துடன் அயச்செந்தூரத்தையும் சேர்த்து தேன் அல்லது நெய் விட்டுச் சாப்பிடலாம். ஷை சூர்ணத்துடன் பொற்றலை கையாந் தகரை சமூல சூர்ணம் சேர்த்து சாப்பிட்டால் ரத்தபித்தம், கண்நோய், என்புருக்கி நோய், சீதளம், தாகம், தாதுநஷ்டம், நீர்துவாரத்தில் ஏற்படும் ரணம், ஆண்குறியில் காணும் சிறு கொப்பளம், பித்தம், பெரும்பாடு, மேகநீர் வியாதி, வாந்தி, மூலக்கடுப்பு, மெய்எரிவு மகோதரம், சூலை, பாண்டு, பெரு வயிறு, மூலம் ஆகிய பிணிகளும் நிவாரணமாகும்.

திரிபலை கற்பம்

கடுக்காய்கனி 1 பங்கு, தான்றிக்கனி 3 பங்கு, நெல்லிக் கனி 4 பங்கு. இவற்றை உலர்த்தி சூர்ணம்செய்து அதனுடன் அரிசிதிப்பிலி, மூங்கில் உப்பு, இந்துப்பு, அதிமதுரம், வசம்பு, கற்கண்டு, தேன், நெய் இவற்றை அளவுடன் சேர்த்து, அய செந்தூரம் அல்லது தங்க பஸ்பம் அல்லது வெள்ளி பஸ்பம் இவற்றில் ஏதாவது ஒன்றுடன் சேர்த்துச் சாப்பிட மூப்பு, பிணி, அகலும். கேசங்கள் கறுத்து வளரும். அதிக ஞாபகசக்தி உண்டாகும். வீரியவிருத்தி ஏற்பட்டு நீண்ட ஆயுளை அடைய லாம்.

வைத்தியசாலையில் மார்ச் மாதத்தில் சிகிச்சைபெற்றவர்களின் விபரம் :-

ஆண்	...	712
பெண்	...	645
12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள்	...	694
ஆக மொத்தம்		2051

வைத்திய ஆராய்ச்சிக் குறிப்பு

சேலம் ஜில்லா, சிந்தாரப்பட்டி திரு ஆர். முத்து ரெட்டியார் அவர்கள் இவ்வைத்தியசாலைக்கு 24—2—66 அன்று வைத்திய சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு எட்டு வருடமாகக் கண், புருவம் நெற்றி இருபுறம், சிலசமயங்களில் நரம்புவலி ஏற்படுவதுண்டு. சில நிமிடங்கள் நீடித்திருக்கும். பிறகு தானே நின்றுவிடும். எப்போது வருமென்று சொல்லமுடியாது.

ஆனல் மூன்று மாதமாக அந்தவலி நீடித்துக் கொண்டிருந்ததாலும், நித்திரையைக்கெடுத்து வந்ததாலும், இதை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று சென்னையிலுள்ள நரம்பு நிபுண வைத்தியர் திரு நரேந்திரன் அவர்களைச்சந்தித்ததில், இது தொந்திரவு உள்ள வியாதி, இதற்கு இங்கு மருந்து கிடையாது. ஆனலும் வேலூரிலுள்ள டாக்டர் சாண்டி அவர்களைச்சந்தித்து அவருடைய ஆலோசனைப்படி நடந்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்.

அதன்பிறகு 31—12—65 அன்று வேலூர் சென்று Dr. Jacob. Chandy, M. Sc., F. R. C. S.(c): F. A. C. S.; F. A. S. E. F. I. C. A.; F. A. M. S ; சந்தித்ததில் அவர் இது நரம்பு சம்மந்தமான வியாதி (Trigeminal Neuralgia in the Distribution of oputhal Mic. Division) என்று கூறினர். இதற்கு இந்தியாவிலே மருந்து கிடையாது. அமெரிக்காவில் ஒருமாத்திரை இருக்கிறது. அதைத்தருவித்து சாப்பிட்டால் உபசாந்தியாகத்தானிருக்கும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

அவர் நம் வைத்தியசாலையைக் கேள்விபட்டு 8—2—66ல் இங்குவந்து ஆறு நாட்கள் தங்கி வைத்தியம் பெற்றுச்சென்றார். மேலும் 15 நாட்களுக்கு மருந்து வாங்கி சென்றிருந்தார். 1—3—66ல் 80% குணமாகிவிட்டது என்றும், எழுதி இருக்கின்றார். அவருக்கு நம்வைத்தியசாலையில் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கப்பட்ட நவபாஷாணகட்டு மட்டிலும் கொடுக்கப்பட்டது. இது நரம்புசம்பந்தமான வியாதிகளைக் குணமாக்குகிறது என்பது புலனாகிறது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Tirubuvanam.

It is a great treasure beautifully maintained. The great event of Lord Siva in the role of bringing Lord Vishnu under control is an unimaginable event and portrays the powers and Lord Siva. This great form of Lord Sarabeswara combining, the devine, the bird and animal shape is probably unparabled and inconceivable. The management are doing great service to public in this temple.

(Sd.) C. Srinivasa Rao,

20—3—66.

Deputy Chief Engineer,

Southern Railway Madras.

செய்திகள்

தருமையாதீனத்தில்

வசந்த நவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வன துர்க்காதேவி திருக்கோயில் வசந்த நவராத்திரி விழா 23—3—66 புதன் கிழமை முதல் தொடங்கி 30—3—66 புதன்கிழமை முடிய உள்ள நாட்களில் சதசண்டியக்ஞமும், லக்ஷ ஆவர்த்தி ஜப ஹோமமும் சிறப்பாக நடைபெற்றன. 22—3—66 அன்று கணபதி ஹோமமும், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் முதலியனவும், 23-3-66 முதல் காலை மாலை இருவேளைகளிலும், சதசண்டியக்ஞம், சுவாசிநீ குமாரி வடு பூஜை முதலியனவும் நடைபெற்றன. வேதம், தேவீ மாகாத்மியம், துர்க்காசூக்தம், வனதுர்க்கோபநிஷதம், அபிராமி அந்தாதி முதலியன பாராயணம் செய்யப்பெற்றன.

30—3—66 புதன்கிழமை காலை மகாபூர்ணாகுதியும், மாலை பலி பூஜை, மண்டல பூஜை முதலியனவும், 31—3—66 வியாழக் கிழமை காலை சதசண்டி யாகக் கலசாபிஷேகமும், சதசண்டி ஹவன பூர்த்தியும் நடைபெற்றன.

விழா நாட்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் வந்து வழிபட்டு அம்பிகையின் அருளைப் பெற்று மகிழ்ந்தனர்.

23—3—66 முதல் 30—3—66 முடிய உள்ள நாட்களில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், பேராசிரியர்கள், தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன், வித்துவான், திருமதி. ப. நீலா முதலியவர்கள், அம்பிகை அருள் நூல்களையும், அம்பிகை அருள் பெற்றவர்களையும் தலைப்புக் களாகக் கொண்டு சொற்பொழிவாற்றினர்.

தருமையாதீனத் திருக்கோயில்களில்

பங்குனி உத்திரத் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானங்களில், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களில் 26—3—66 சனிக்கிழமை முதல் 4—4—66 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் பங்குனித் திங்கட் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

வேளூரில் :-

30—3—66 அன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஸ்ரீ வைத்தியநாதசுவாமியைப் பூசித்துச் செண்டு பெறுவதும், சகோபுரக் காட்சியும், 1, 2—4—66 ஆகிய நாட்களில் திருத்தேர்ப் பெருவிழாவும், 4—4—66 அன்று தீர்த்தங்கொடுத்தருளலும், 7—4—66 அன்று தெப்பத் திருநாளும் நிகழ்ந்தன.

விழா நாட்களில் அறிஞர்களின் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 29—3—66 செவ்வாய்க்கிழமை திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "வேளூர்த் திருப்பதிகங்கள்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். தேவார வகுப்பு மாணவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் அருளால் பரிசுகள் வழங்கப்பட்டன. பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானை மேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்ந்தது.

திருபுவனத்தில் :-

30—3—66 அன்று இடபவாகனக் காட்சியும், 1—4—66 அன்று திருக்கல்யாண மகோற்சவமும், 3—4—66 அன்று திருத்தேர்ப் பெருவிழாவும், 6—4—66 அன்று ஸ்ரீ சரபேசுவரருக்கு ஏகதின லக்ஷார்ச்சனையும், வெள்ளி ரதத்தில் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. அறிஞர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன.

5—4—66 அன்று திருமுறை விழாவும், தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றன. திருவிடைமருதூர் வித்வான், திரு. மு. நடராசதேசிகர் அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது. தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிய பின்னர் பண்ணிசைப் பாராயணத்துடன் யானைமேல் திருமுறைத் திருவீதியுலா நிகழ்ந்தது.

பேரளத்தில் :-

1—4—66 திருக்கல்யாணத் திருநாள் அன்று புஷ்ப விமானத்தில் திருவீதியுலா நிகழ்ந்தது. 2—4—66 அன்று ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி குதிரை வாகனத்தில் எழுந்தருளி பாரிவேட்டைக் காட்சியும், 3—4—66 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 4—4—66 அக்னி புஷ்கரிணியில் பஞ்சமூர்த்திகள் ரிஷபவாகனாருடராய்த் தீர்த்தங் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. திருவிழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன.

வேலூரில் இந்து அநாதைக் குழந்தைகள் இல்லத்தின் ஆண்டு விழா

தருமையாதீனம் தேவஸ்தானங்கள் இந்து அநாதைக் குழந்தைகள் இல்லத்தின் ஆண்டு விழா விசுவாவசு ஆண்டு பங்குனித்திங்கள் 13ஆம் நாள் (26—3—66) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் சிறப்புரை வழங்கி, மாணவர் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துப் பரிசுகள் வழங்கினார்கள். விழாவின்போது இல்லத்தின் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. இறை வணக்கத்துடன் விழாத் தொடங்கி, நன்றி நவின்றபின் நாட்டு வாழ்த்துடன் இனிது நிறைவுற்றது.

திருக்கடவூரில்
சுழற்கோப்பை வழங்கும் விழா

சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தூய்மையாக வைக்கப்பட்டிருக்கும் ஆலயத்திற்கு சுழற்கோப்பை மாவட்டவாரியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. திருச்சி தஞ்சை மாவட்டத்தில் தருமையாதீனத்தைச் சேர்ந்த திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஆலயம் 1965ஆம் வருஷத்திற்கு மேற்படி சுழற்கோப்பை பெறத்தக்க சிறப்புடையதென்று தீர்மானிக்கப்பெற்றது.

4—4—66 திங்கட்கிழமையன்று மாலை 6 மணி அளவில் ஆலயத்தில் சுழற்கோப்பை வழங்கும் விழா நடைபெற்றது. சுழற்கோப்பையை, தஞ்சைத் துணை ஆணையர் திருவாளர். A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள் வழங்கினார்கள். விழா இறைவணக்கத்துடன் தொடங்கப்பெற்றது. வரவேற்புரை முதலியன முன்னர் இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

திருவாமூரில்

ஸ்ரீ அப்பர்சுவாமிகள் குருபூஜைவிழா

சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவரான ஸ்ரீ அப்பர் சுவாமிகள் (திருநாவுக்கரசு நாயனார்) அவதரித்த பெருமையுடையது திருவாமூர். இத்தலம் கடலூர் - சித்தூர்ச் சாலையில் பண்ருட்டிக்கு மேற்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது. இங்குப் புதிதாகக் கட்டப்பட்டு 14—7-65ல் மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்ற ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் திருக்கோயில் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகிறது அப்பர் சந்நிதியில் தெய்வ ஒளி பெருகி வருகிறது. பிரார்த்தனை செய்து கொள்வோரின் எண்ணங்கள் நிறைவேறுகின்றன. மாதந்தோறும் நடைபெறும சதய நக்ஷத்திர விழாவிலும் மக்கள் ஏராளமாக வந்து வழிபட்டு நலமுறுகின்றனர், பக்தர்களின் காணிக்கையால் ரூ. 4,000 செலவில் அப்பருக்கும், ரூ. 3,000 செலவில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கும் வெள்ளிக் கவசங்கள் அணிவிக்கப்பட்டுள்ளன. பத்து ஏக்கர் வரை நிலங்கள் சேர்ந்துள்ளன. ரூ. 2,000 மதிப்புள்ள வெள்ளிச் சோடசோபசார சாமான்கள் சேர்ந்துள்ளன.

ஆண்டுதோறும் சித்திரைச் சதயத்தன்று ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழுவினர் பக்தர்களின் பொருளுதவியால் அப்பர் சுவாமிகள் குருபூஜையை வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். இந்த ஆண்டில் 16—4—66 சித்திரை மாதம் 3-ம் நாள் சனிக்கிழமை, குருபூஜை நடைபெறுகிறது. அதையொட்டி 14—4—66 முடிய மூன்று நாட்கள் "அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு" குருபூஜை விழாக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறுகிறது. அதில் அறிஞர்கள் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றுகின்றனர்.

பிரபலத் தேவார ஓதுவாமூர்த்திகள் பங்குகொண்டு பண்ணிசையரங்கும், ஆராய்ச்சியும் நிகழ்த்துகிறார்கள். தேவார ஓதுவாமூர்த்திகளுள் சிறந்த ஒருவருக்கு "திருமுறைக் கலாநிதி" என்ற பட்டமளித்துப் பாராட்டுவதாக முடிவு செய்துள்ளபடி இந்த ஆண்டில் திருவிடைமருதூர் திரு. மு. நடராஜ தேசிகருக்கு வழங்கப்பெறும். ஆராய்ச்சிக்கு திரு. மு. நடராஜ தேசிகர் தலைமை வகிக்கிறார்கள்.

சிவபூசைச் செல்வர்கள் 50 பேருக்குமேல் ஸ்ரீலஸ்ரீ மீனாக்ஷி சுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் மூன்று நாட்களிலும் காலையில் சிவபூசையும், சிவபூசைத் தத்துவ விளக்க மாநாடும் நடைபெற உள்ளது. சிவபூசைச் செல்வர் பலர் பங்கு கொள்கின்றனர்.

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(பராபவ௵ சித்திரை௴ 1௳ முதல் 30௳ முடிய)

(14—4—66 முதல் 13—5—66 முடிய)

ஸ்வஸ்திஸ்ரீ பராபவ நாமஸம்வத்ஸர ஜெகத் ஜாதகம்

புதன்	சூரிய செவ்	ராகு	குரு
சுக்ர சனி	ராசி சக்ரம்.		
சந்திர			
	ல / கேது		

சந்திர	சூரிய சனி	செவ்	
சுக்ர	நவாம்ச சக்ரம்.		ல / கேது
ராகு			புதன்
	குரு		

விசுவாவசுவருஷம் பங்குனிமாதம் 31ம் தேதி புதவாரம் கிருஷ்ண நவமியும் உத்திராட நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் சூரிய உதயாதி நாழிகை 35-12க்கு விருச்சிக லக்னத்தில் கடக நவாம்சையில் பராபவ வருஷத்திய மேஷ ஸங்கிரமண பிரவேச காலம் சுபம்.

மேஷ ஸங்கிரமணம் இரவிலும், பிரவேச கால லக்னாதிபதி அங்காரகன் ஸ்வக்ஷேத்திரத்திலும், நவநாயகர்களில் புதனுக்கு 5 ஆதிபத்யமும், சனி சுக்ரன் சந்திரன் இவர்களுக்கு இதர ஆதிபத்யமும், கிடைத்தபடியால் உலகம் சுபிக்ஷமாயும், ஸஸ்ய தான்ய விருத்திகளுடனும் இருந்து ஸகல பிரஜைகளும் ஸந்தோஷம் அடைவார்கள். ராஜாங்கம் செழிக்கும், தெய்வ பலம் முன்னின்று நமது பாரதபூமியைக் காக்கும்.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சகலவிதமான சௌக்கியத்தையும் அடையும்படி செய்யும். ஜீவன லாபம் ஏற்படும். விவாகாதி மங்கள காரியம் உண்டாகும். நூதன பிரபு தரிசனமும் நஷ்டதன பிராப்தியும் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சுப சோபனாதிகள் மூலமாய், அதிக செலவினங்கள் ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் கிரய விக்கிரயங்கள் ஏற்படும். தொழில் சம்பந்தமாய் இடம் மாறச்செய்யும். ஆரோக்கியம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையே தரும். புத்திராதிகள்மூலம் கவலையைக் கொடுக்கும். அடிக்கடி எதிலும் நஷ்டத்தையே உண்டுபண்ணும். குடும்பத்தொல்லை அதிகமாகும். மத்தியகாலங்களில் சுபங்களையும் உண்டுபண்ணும். ஆரோக்யக்குறைவும் காட்டும். சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையேதரும். எதிர்பாராத செலவினங்கள் வந்துசேரும். விவாகாதி சுபங்கள் மூலமாய் செலவினங்கள் அதிகமாகும். வெகுகாலம் எதிர்பார்த்து இருந்த விவகாரம் ஜெயிக்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள் ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமேயாகும். விவாகாதி சுபங்கள் ஏற்படச்செய்யும். தொழில் ஓங்கும். இல்லற சுகம் கிடைக்கும். கடன் நிவர்த்தியாகும். விசேஷ லாபம் உண்டுபண்ணும் மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். தெய்வ சக்தி ஓங்கும். உலக பிரசித்தியை உண்டுபண்ணும். ராஜாங்க மூலமாய் அநேகவிதமான நன்மைகள் உண்டுபண்ணும். சஞ்சார பலன் அதிகமாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கச்செய்யும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின் கிரய விக்ரயத்தால் லாபம் உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். யக்ஞயாகாதி பிரதிஷ்டா பலன்கள் கிடைக்கச்செய்யும். தெய்வசக்தி ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். சுபசோபனுதிகள் மூலமாய் செலவினங்கள் ஏற்படும். சனி, செய்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼-அனுஷம்-கேட்டை

விசாகம் நான்காம் பாதமும் அனுஷம் 1, 2 பாதமும் சுபமிராது; நஷ்டத்தையும் கவலைகளையும் உண்டுபண்ணும். மற்ற 6 பாதங்களும், சுபமேயாகும். வித்யா விருத்தியும் நூதன ஜீவன லாபமும் கிடைக்கச்செய்யும். இருப்பிடம் மாறும். குடும்பம் விருத்தியாகும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். குடும்ப விருத்தி ஏற்படும். நஷ்டதனம் தானுக வந்துசேரும். புத்திராதிகளால் விசேஷமான மேன்மை ஏற்படச்செய்யும். தூர சஞ்சாரம் உண்டுபண்ணும். தெய்வபலம் பிரகாசிக்கும். திங்கள், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

- மகரராசி 9 பாதங்களும் சுபமாகும். புத்திர விருத்தி ஏற்படும். நூதன கிரகநிர்மாணம் ஏற்படச்செய்யும். நூதனமாகத் தொழில் ஏற்படும். ராஜாங்கமூலம் அனுகூலம் உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். விவாகாதி சுபங்கள் ஏற்படச்செய்யும். ஜீவன விருத்தியாகும். விரோதம் நீங்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், சமஸ்தமான மங்களத்தையும் உண்டுபண்ணும். குடும்ப விருத்தி ஏற்படச்செய்யும். விவாகாதி சுபங்கள் ஏற்படும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும் தொழில் ஓங்கும், தெய்வபலம் முன்னின்று காக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

குமரகுருபரன் — **ஆண்டுச் சந்தா 2 — 25** —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,

" குமரகுருபரன் " ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.